www.tamilarangam.net

P. RAYA.

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
-SEINE FRANCE



கார்த்.மார் 14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விண்மீனும் அகதியும்

- நிவேதிகன் -

கதவு திறந்து,
காற்றுத் தழுவ உடம்பு ஜில்லிடும்.
அண்ணாந்து வானத்தைப் பார்த்தேன்.
அழகு ஒழுகும் நிலவு
கண் சிமிட்டி ரகசியம்
பேசும் நட்சத்திரங்கள்.

ரசிக்கும் நிலையில் நானில்லை.
மனம் அழும் போதும்
மூளை அலையும் போதும்
ரசனை எங்கே வாழும்?

கேலி பேசும்
நட்சத்திரமே!
எனக்குத் தெரியவில்லை.
உனக்காவது தெரிகின்றதா
அகதிக் கூடாரங்களின் எண்ணிக்கை?
இல்லையேல்
உலகமே அகதிக் கூடாரமா?

உற்றுப்பார் உற்றுப்பார்
ஒளிக்கண்களை வீசு
அனல் வீசும் பாலைவனங்களில்
சுடு மணல் பரப்பில்
தண்ணீர் விடாயில் தவிக்கும்
எத்தனை மானிடம்.

யோர்தான் நதிக்கரையில்
சிரியாவின் எல்லையோரக் கிராமங்களில்
பலஸ்தீனம் நினைந்து
தவித்தலையும்
எத்தனை மானிடம்.

எந்தையும் தாயும்
கூடிக் குலாவிய
எனது பரம்பரையின்
ஜென்ம பூமியில்
கோயிலுக்குள்ளும், கூடாரங்களுக்குள்ளும்
அடர்ந்த காடுகளுக்குள்ளும்
பசி வறுக்க உயிருக்காய் வாழும்
எத்தனை மானுடம்.

கன்றைப்பிரிந்த பசு
மண்ணைப்பிரிந்த மல்லிகைச்செடி
சிறகுகள் உதிர்ந்த வண்ணத்துப்பூச்சி
கண்ணீர் வடிக்காமலா இருக்கும்.
இல்லையேல் என்னைப்போல்
காரணம் தேடாமலா இருக்கும்?

*****************

அறிமுகம்



கவிதைத் தொகுப்பு

www.tamilarangam.net

# மனிதம்



மணலாறு (இதற்கு சிங்கள பெயர்தான் வெலிஓயா) பகுதியில் புலிகளை அழிப்பதாக அல்லது துரத்தியடிப்பதாக கூறிக் கொண்டு தமிழ்ப் பகுதிகளை (முல்லைத்தீவு - திருகோணமலை) கூறுபோடும் நடவடிக்கையில் அரசும் இராணுவமும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. ஆனால் மறுமுனையில் EPDP யும் TELO வும் இன்னும் அவர்களது கூட்டாளிகளும் « புலிகளின் பாசிச எதேச்சாதிகார போக்கு ஏனைய இயக்கங்களை அழிக்கிறது. புலிகள் -
அழிந்தால்தான் தமிழ்ப் பகுதியில் ஓரளவு ஜனநாயகம் நிமிர வாய்ப்பேற்படும். இராணுவம் நிலைகொண்டாலும் தமிழ்ப் பகுதியில் இராணுவத்தால் இவ்வளவு கொடூரமான பாசிசத்தை கட்டவிழ்த்துவிட முடியாது » என கூறிக்கொண்டு புலிகள் மீதான இராணுவ நடவடிக்கைக்கு வெளிப்படையாகவே உதவுகின்றனர்.

ஆனையிறவு தாக்குதல் வெற்றியைத் தொடர்ந்து இராணுவம் பெரும் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவே செய்திகள் கூறுகின்றன. சப்த தீவுகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவே அறியப்படுகிறது.

இவ் வெற்றியினால் டக்ளஸ் தேவாவோ TELO உட்பட அவரது கூட்டாளிகளோ நினைப்பதுபோல் அல்லது விரும்புவதுபோல் அரசோ இராணுவமோ புலிகளை அழிக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போவதில்லை ; அது சாத்தியமும் இல்லை. இவர்கள் கண்டுகொண் பதுபோல் புலிகளின் எதேச்சாதிகாரப் போக்கை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதுமில்லை. இதற்கு கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளரான கேர்ணல் சரத் முனசிங்க 24.10.91 இல் "விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டால் இராணுவம் யாழ் நகரைக் கைப்பற்றாது." என பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்த கூற்றே சான்றாகும்.

உண்மையில் அரசின் நோக்கங்களில் ஒன்று - கிழக்குப் பகுதிகளின் தமிழர்களை துரத்திவிட்டு சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் தமிழ்ப் பிரதேசங்களை கூறுபோடுவது; இரண்டு - இராணுவ ரீதியில் புலிகளைப் பல வீனப்படுத்துவதும் ஒரு பேரப் பேச்சிற்கு அவர்களை இணங்கச் செய்வதுமே! இந்நோக்கை உறுதிப்படுத்தும் வகையில் -ஏதோ தன்விருப்பிலேயே தொடர்பை மேற்கொண்டிருப்பதாக வெளியில் காட்டிக்கொள்ளும் - அமைச்சர் தொண்டமானுக்கும் புலிகளுக்கும் இடையிலான கடிதத் தொடர்பு சிறந்த ஆதாரம் ஆகிறது.

புலிகளின் பாசிச எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிரான செயற்பாட்டில் ஒரு சிறு அசைவையாவது ஏற்ப டுத்த முயற்சிக்கும் உண்மை ஜனநாயக சக்திகளுடன் ஒப்பிடுகையில் -

இராணுவத்துடன் இணைந்து பாரிய தாக்குதலைத் தொடுக்- கும் EPDP, TELO போன்றோரின் நடவடிக்கைகள் ஒரு துரும்பாகக்கூட மதிக்கப்படுவதற்கில்லை.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளை அழித்தொழிப்பதற்கு விடுதலைப் புலிகளைப் போன்ற ஒரு

www.tamilarangam.net



நல்ல தோழன் வேறுயாருமாக இருக்கமுடியாது என்பது பிரேமதாசாவிற்கோ அரசிற்கோ நன்கு தெரியும். விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான பேரப்பேச்சின் விளைவு எமது விடுதலையையோ உரிமைகளையோ அல்லது மாகாண சுயாட்சி அமைப்பு முறையையோ பெற்றுத்தருகிறதோ (?) இல்லையோ, விடுதலைப் புலிகள் தென்பகுதியில் சுதந்திரமாக உலாவி வரவும், அதனால் இன்னும் மறைந்திருக்கும் ஜனநாயக சக்திகளை அழித்தொழிப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதே கசப்பான உண்மையாகும்.

புலிகளின் ஜனநாயக மறுப்பு எதேச்சாதிகாரத்திற்கு முடிவு கட்டுவது என்பது ஜனநாயக சக்திகளுக்கு பலமூட்டும் முயற்சியில் தங்கியிருக்கிறது. நெரிக்கப்பட்டிருக்கும் குரல்வளைகள் திறக்கப்பட வேண்டும். இது ஒரு நாளிலோ சில மாதங்களிலோ நிறைவுறும் விசயமும் இல்லை.
இதற்கு வலுவூட்டும் வகையில் செயற்பட "புலிகள் தமிழ் தேசிய சக்திகள்" என்றும், "இல்லை! அவர்கள் பாசிச சக்திகள்" என்றும் ஜனநாயக சக்திகள் மத்தியில் உலவும் கருத்தமைவுகள் ஆரோக்கியமான தொடர்ச்சியான விவாதத்தினூடாக தீர்க்கப்பட வேண்டும் என்பது உண்மை தான். ஆனாலும் இது தீர்க்கப்படும்வரை விவாதமேடையில் காத்திருப்பதை விடுத்து, புலிகளின் ஜனநாயக மறுப்பு எதேச்சாதிகார போக்கிற்கு எதிரான செயற்பாடு பலம் பெறவேண்டும். இந்த நடைமுறைத் தளம் ஜனநாயக சக்திகளுக்கிடையிலான மேலும் பல முரண்பாடுகளுக்கு விடை கண்டு முன்னேற உதவும்!

www.tamilarangam.net



# என்று மடியும் எங்கள்........

நவம்பர் 19ம் திகதி சரியாக மாலை 6.15 மணிக்கெல்லாம் லங்கன்தால் பாணவ் [புகையிரத நிலையம்] இல் நிற்கிறேன். போர்ண் நகரோடு ஒப்பிடும் போது பனி மூட்டம் லங்கன்தாலில் எப்போதும் அதிகமாகவே இருக்கும். இந்த குளிர் பொருட்படுத்தாமல் ஐம்பதுக்கு மேற்பட்ட மக்கள் பாணவ் முன்னால் கூடி நின்றனர் இங்கிருந்துதான் இனவாதிகளுக்கெதிரான ஊர்வலம் ஆரம்பமாகப் போகிறது

லங்கன்தால் போர்ண்ணிலிருந்து கிட்டத்தட்ட நாற்பது கிலோ மீற்றர் தொலைவில், சூரிச் போகும் திசையில் இருக்கும் ஒரு நகரம். சுவிஸில் இனவாதக் காற்று அடிக்கத் தொடங்கும் போதெல்லாம் லங்கன்தாலில் அகதிகளுக்கும், வெளிநாட்டவருக்கும் அடிவிழாத/தாக்குதல் நிகழாத நாளே இல்லை. இதுபற்றி ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்த சுவிஸ் நண்பரோடு நான் கதைத்த போது அவர் சொன்ன செய்தி என்னை அதிர்ச்சிக்குள்




ளாக்கியது அது ஜேர்மனியில் கிட்லரின் காலத்தில் நிலவிய நாசிசக் கொள்கையை வரவேற்று ஆதரவளித்த இடங்களில் லங்கன்தாலும் ஒன்றாயிருந்தது என்பதே.

இம்முறையும் புதிய நாஜிகளின் கைவரிசை லங்கன்தாலில் மீண்டும் ஓங்கியது. ஆம் பதினாறாம் திகதி அதிகாலை மூன்று மணிக்கு "Lotzwil" (லங்கன்தாலை அண்மையிலுள்ள ஒரு கிராமம்) எனும் இடத்தில் தமிழ் குடும்பமொன்று வசிக்கும் வீடொன்றுக்கு பெற்றோல் குண்டு வீச்சு நிகழ்ந்தது. அரசாங்கம் கண்டித்தும் சுவிஸில் ஓங்கி வரும் இனவாதத்துக்கும் எதிராகவே

www.tamilarangam.net



இந்த ஊர்வலம் ஒழுங்கு படுத்தப்பட்டது. கடந்த ஒரு வருட காலமாகவே சுவிஸில் இனவாதச் செயல்கள் அதிகரித்து வந்தாலும்; இதைக் கண்டிக்கும் நடவடிக்கைகள் பெருமளவு நிகழவில்லை. முதன்முறையாக கண்ரோன் பேர்ணில் உள்ள சில சிறிய அரசியல் கட்சிகளும் சுதேச நல அமைப்புகளும் இணைந்து ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தன.

இனி எங்கு ஒரு இனவாத சம்பவம் நிகழ்கிறதோ அந்த இடத்திலேயே; சம்பவம் நிகழ்ந்த ஒரு நாட்களுக்குள் எதிர்ப்பு நடவடிக்கையை மேற் கொள்வதென்றும் தீர்மானித்தன. அதன்படியே இந்த ஊர்வலம் இங்கு நிகழ்த்த ஏற்பாடாகி இருந்தது. இந்த ஊர்வலத்தில் இன்னொரு முக்கிய விடயம் ஊர்வலமானது வங்கன்தாலில் இருந்து புறப்பட்டு தாக்குதலுக்கிலக்கான Lotywil வீடுவரை செல்லும் என்பது

தாக்குதலுக்குட்பட்ட வீட்டில் வசிக்கும் ஆறுமுகமும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார் இப்படி ஒரு சம்பவம் Lotywil இல் நிகழ்ந்ததென்று; பத்திரிகையில் வெளிவந்த சிறிய பெட்டிச் செய்தி மூலமே அறிந்து கொண்டேன். விபரமாக அறியும் பொருட்டு அவரிடமே கேட்டேன்.

« என்னத்தை தம்பி சொல்லுறது வழக்கம் போல வெள்ளி இரவு படுக்கைக்கு போட்டம். இருந்தாப் போல ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழும்பிப் பார்த்தேன். முன் பக்க ஜன்னல் முழுவதும் பெரிய வெளிச்சமாய் தெரிந்தது. என்னடா---? விடிஞ்சு போச்சோ--? பிள்ளயளை பள்ளிக் காரிலோ விட வேணும் என்டு ஒருக்கா நினைச்சுப் போட்டு வடிவாப் பார்த்தன் அது நெருப்பு---!. கேட்டின் சீலையில் பிடிச்சு சுவாலை விட்டு மேல் நோக்கி எரிஞ்சு கொண்டிருந்தது. எனக்கென்ன செய்யிறதெண்டே தெரியவில்லை. கை, கால் வேற பதறத் தொடங்கி விட்டுது. ஐயோ---! Hilfe--! என்டு டொச்சிலயும், தமிழிலயும் ஏதோ கத்திக் கொண்டு பிள்ளையள் படுத்திருந்த இடத்துக்கு தான் நான் ஓடினேன் »

www.tamilarangam.net



அவர் சொல்லி முடித்த போது நானும் அந்த வேதனையில் சங்கமித்தேன். உண்மையில் ஆறுமுகம் குடும்பம் மட்டுமல்ல அந்த வீட்டில் குடியிருக்கும் ஏனையவர்களும் கூட மறுபிறப்பு எடுத்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அந்த நாஜிகள் வீசிய பெட்ரோல் குண்டு யன்னல் கண்ணாடியை சிதறடித்து வீட்டின் உள்ளே விழாமல் வெளிப்பக்கமாய் விழுந்ததால் தான் இவர்கள் உயிர்தப்பிக் கொண்டனர். இல்லையெனில் கூரில் நடந்தது போன்று எல்லாம் சாம்பராய் போயிருக்கும்.

பத்திரிகையாளரும் தொலைக் காட்சி படப் பிடிப்பாளரும் இப்போது வந்து சேர்ந்தனர். ஊர்வலத்தில் பங்கு கொள்ள வந்தவர்களின் எண்ணிக்கையும் நூறுக்கும் அதிகமாகிவிட்டது. எங்கள் எல்லோருக்கும் ஒரு அடி நீளமான மெழுகுவர்த்திகள் வழங்கப்பட்டன. நாம் எல்லோரும் அதை ஒளிர வைத்தோம். ஊர்வலம் தொடங்கியது.

« நாங்கள் இனவாதத்துக்கு எதிராய் போராடப் போகிறோம் அதன் முதல்படிதான் இந்த ஊர்வலம் அகதிகள் மீது தாக்குதல் நடத்த எது வித நியாயமுமில்லை»

ஊர்வல ஏற்பாட்டாளர்களில் ஒருவர் ஆரம்பத்தில் ஆற்றிய உரை இது. ஆறு நாற்பத்தைந்து. மெல்லிய குளிர் காற்று. பனிப்புகாருக்குள் ஒழித்திருந்த பாதைகளைத் தேடி மெழுகுவர்த்தி ஏந்திய பாதங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலவாய் திரண்டன. ஊர்வலத்தின் முன்னால்--

«நாங்கள் இனவாதத்துக்கெதிராக போராடுகிறோம். அகதிகள் எமது நாட்டில் வாழ வேண்டும்»

என்ற சுலோகங்கள் பதித்த வெண்சீலை மிளிர்ந்தது. ஊர்வலம் வங்கன் தாவ் மார்க்காசாவை (Markt kasse) சென்றடைந்த போது ஒலி பெருக்கியில் சுலோகங்கள் எழுப்பப்பட்டன. இந்த இனவாதத் தாக்குதல்களுக்கு பலமான அரசியல் கட்சிகளின் ஆதரவு உண்டு என்று சுட்டிக்காட்டப்பட்டது. இது

www.tamilarangam.net


பற்றி துண்டு பிரசுரத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஊர்வலம் அமைதியாக Lothyil ஐ நோக்கி நகர்ந்தது. எட்டு மணியும் ஆகாத இருள் சூழ் பொழுதில் மெழுகு வர்த்திகள் மட்டும் வீதியில் நகர்வது போல் ஓர் அழகு அது இனவாதத்தை சுட்டெரிக்கப்புறப்பட்ட ஜோர்க் கிரவ்! வீதிகளில் வந்த வாகனங்கள் எல்லாம் மறிக்கப்பட்டு துண்டுப் பிரசுரம் கொடுக்கப்பட்டது. சிலர் வாங்க மறுத்தனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட உணர்ச்சியாளர்களின் மெழுகு வர்த்திகள் பிரசுரம் வாங்க மறுத்த வாகனங்களை உரசிச் சென்றன.

ஊர்வலம் வெற்றிகரமாக லங்கன்தால் எல்லையைத் தாண்டி Lothyil ஐ அண்மிக்கும் போது திடீரென ஊர்வலத்தை ஊடறுத்து பாய்ந்தது ஒரு வெள்ளை நிறகார். எல்லோரும் நிறுத்து! நிறுத்து! என்று கத்தியும் வாகனம் நிறுத்தப்படாமல் விரைந்து சென்றது. உடைதகரும் மெழுகுவர்த்தி உரசலும் வாகனத்தை பதம் பார்க்க தவறவில்லை. இந்த கார்ச் சம்பவம் யாரோ ஓர் இனவாதியால் நிகழ்த்தப்பட்டது என்கிற கருதினோம். இருந்தும் ஊர்வலம் அமைதி கலையாமல் Lothyil தமிழர் வீடு நோக்கி வந்து சேர்ந்தது.

தாக்குதலுக்கு உட்பட்ட வீட்டைப் பார்த்தேன். அத்திவாரம் கல்லாலும் ஏனைய வீட்டின் மூன்று மாடிப் பகுதிகள் மரத்தாலும் கட்டப்பட்டிருந்தன. நெருப்பு பிடித்தால் எரிவதற்கு எந்தத்தடையுமே இல்லை.

யாருமே எதிர்பார்க்கவில்லை.... ஊர்வலம் இப்படி வெற்றிகரமாக நிகழுமென்று. ஊர்வலத்தை முடித்து வைத்து பேசிய ஊர்வல ஏற்பாட்டாளர்களில் ஒருவர்.

“நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம். நீங்கள் அச்சம் கொளத் தேவையில்லை. எங்களது செயற்பாடு தொடரும். நீங்களும் எங்களோடு இணைய வேண்டும்.” என்று குறிப்பிட்டார்.

www.tamilarangam.net



"நாளை வேலைக்கு போக வேண்டியவர்கள் தவிர விரும்பியவர்கள் எல்லோரும் இரவு முழுவதும் இங்கு நின்று உற்சாகம் தளம்பாமலும் ஊர்வலத்தை ஒழுங்கு செய்தவர்கள் கேட்டுக் கொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்த தமிழர்களின் எண்ணிக்கை குறைவுதான். இதற்கான காரணம் 'ஊர்வலத்தில் கலந்து கொண்டால் மீண்டும் தாக்கப்படலாம் என்ற அச்சமே' என நிருபர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த தமிழ் நண்பர் தெரிவித்தார்.

நீங்கள் நாளைக்கு வேலைக்கு செல்ல வேண்டியதால் உறங்குங்கள் நாங்கள் இன்று உங்களுக்கு இடைஞ்சல் எதுவும் தராமல் வெளியே பாதுகாப்பாக விடியும் வரை இருப்போம் என்று கூறி வீட்டை சுற்றி காவல் இருந்தமை ஒரு வித்தியாசமான ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக இருந்தது.

இத் தீவைப்பு முயற்சி நிகழ்ந்த போது கூட உள்ள அயலவர் - சுவிஸ்காரர்கள் - யாருமே வெளியே வரவில்லை என்பது பற்றி ஊர்வல ஏற்பாட்டாளர்கள் வேதனைப் பட்டனர். அதே நேரம் எம்மவர்கள் கூட இதை ஒரு சிறு சம்பவமாக கருதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளாதது வருத்தத்திற்குரியது.

- க.தீபன் -

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

அட்டைப் படம் : சிவா

www.tamilarangam.net



# ஆண்டிகள் கூடினால்

## சார்க் மாநாடு

ஆண்டிகள் சிலர் ஒன்றாகக்கூடி மடம் கட்ட வெளிக்கிட்ட கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் இலங்கையில் நவம்பர் மாதம் ஏழாம் எட்டாம் திகதிகளில் நடைபெறவிருந்த "சார்க்" மாநாடு அப்படியானதொரு ஆண்டிகள் கதைதான் என்பதை அந்த மாநாட்டு ஏற்பாடுகளை கவனித்தவர்கள் புரிந்து கொள்ளலாம். மாநாட்டு ஏற்பாடுகள் திட்டமிட்டபடி இருந்தும் இறுதி நேரத்தில் பூட்டான் மன்னரும், இந்தியாவின் பிரதமரும் வராததால் சார்க் மாநாடு இரத்தானதாம். 'சமாதானத்தின் காவலன்' 'அகிம்சாமூர்த்தி' என்று தன்னை விளம்பரம் செய்யும் இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு இது அவமானம் என்று பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் புழுங்கிக்கொண்டிருக்கும் அதேசமயம் எதிர்க்கட்சிகள் பிரேமதாசாவின் நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குற்றம் சாட்டுகிறார்கள் எப்படியிருந்தபோதும் பூட்டான் மன்னர் பங்கு பெறமுடியாது என்றதை சாதகமாக்கிக்கொண்ட இந்தியாவின்குட்டி ஆதிக்க நினைப்புத்தான் மாநாடு நிறுத்தப்பட்டமைக்கு காரணம் என்று செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

### ஏன் இந்த சார்க்?

தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா இந்தோனேசியா, பிலிப்பீன், தாய்லாந்து புரூணை போன்ற நாடுகள் தங்களுக்கு மாறி கம்யூனிச நாடான வியட்நாமால் ஏதாவது 'ஆபத்து' வரக்கூடாது என்று தமக்குள் ஏற்படுத்திய 'ஆசியான்' என்ற ஒருங்கிணைப்பில் சேர்த்துக் கொள்ளாமல் தள்ளி வைக்கப்பட்டவர்களே தமக்குள் ஒரு 'நல்லுறவை' ஏற்படுத்த உருவானதே சார்க் மாநாடு. இதில் இலங்கை, இந்தியா, மாலைதீவு, பூட்டான், பாகிஸ்தான், பங்களாதேஸ் போன்ற நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 1985 இல் ஆரம்பமான இதன் முதலாவது மாநாட்டுக்குப்பின்னர் ஆண்டுதோறும் மாறி மாறி அங்கத்துவ

www.tamilarangam.net



நாடுகளில் மாநாடுகள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த மாநாடு கூடுவதன் நோக்கமாக தெற்காசிய நாடுகளில் காணப்படும் பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வுகாண்பது என்று அறிவித்துள்ளார்கள். பிரச்சனை என்னவென்றால் இந்த தெற்காசிய நாடுகள் தமக்கிடையில் ஒன்றுக்கொன்று குழிவெட்டிக்கொண்டும், ஏகாதிபத்திய அமெரிக்காவிற்கு வாலை ஆட்டிக்கொண்டும் தமக்கிடையில் "பரஸ்பர நல்லெண்ண அடிப்படையில் முன்னேறப்போவதாக" கூறி இந்நாடுகளின் தலைவர்கள் ஒன்றாகக்கூடி கூத்து நடத்துவதைத்தான் மாநாடு என்று அழைக்கிறார்கள்.

இலங்கையில் தமிழ்மக்கள் மீதான இன ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு காட்டாட்சி நடத்தும் சிங்கள இனவெறி U.N.P அரசு, மன்னராட்சி நடத்தும் பூட்டான், இவ்வளவு நாளும் மாறி மாறி இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் நடத்தி தொடர்ந்தும் வறுமையிலும் உட்பூசல்களிலும். இந்தியாவுடன் எல்லை தகராறுகளிலும், இராணுவ மயப்படுத்தலிலும். இருக்கும் பாகிஸ்தான், பங்களாதேஸ் என்பனவும், அசாம், பஞ்சாப், காஸ்மீர் போன்ற பிரதேசங்களில் இன ஒடுக்கலையும் அண்டை நாடுகள் மீது சண்டித்தனம் செய்து கொள்ள தயாராக இருக்கும் ஆண்டி இந்தியாவும் தான் தாங்கள் நல்லெண்ண அடிப்படையில் கூடுகின்றார்களாம்.

வேடிக்கை என்னவென்றால் "நிலையான நட்புறவை உறுதிப்படுத்தும் வகையில் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடாமல் இருப்பது" இவர்கள் கொள்கையாகக் கூறப்படுகிறது. எப்படியென்றால் இலங்கை, மாலைதீவு மீது இந்தியா ஆக்கிரமிப்பு பற்றி, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கு எதிராக தேசிய வெறியைக் கக்கும் இந்திய அரசு பற்றி, இலங்கையில் நாளாந்தம் இனவெறி இராணுவத்தால் கொல்லப்படும் தமிழ்மக்கள் பற்றி, பாகிஸ்தான், பங்களா தேசங்களில் ஜனநாயக மறுப்பு கருத்து சுதந்திர மறுப்பு இவையெல்லாம் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் இவைபற்றியெல்லாம் இந்தத்தலைவர்கள் கதைக்க மாட்டார்கள். மாநாடு என்றால் வேறு என்ன ராச உபசார வரவேற்புகள் விருந்து கேளிக்கைகள் இவைபோக மிகுதியாக இருக்கிறதே சுற்றாடல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாதுகாப்பு, வனவிலங்கு பராமரிப்பு, வீடமைப்பு போன்ற இப்படி ஒன்று பண்ணி உருப்படியில்லாமல் ஏதாவது அலட்டாதிருப்பின் பிரியாவிடையுடன் தலைவர்கள் புறப்பட்டுவிடுவார்கள். இந்தக் கூத்துக்கெல்லாம் எப்படி வீணாக இந்த ஏழை நாடுகளில் மக்களின் பணம் செலவழிக்கப்படுகிறது. இந்த சார்க் நாடுகளில் முதன்மையாகவும் ஆளுமை-யானதாகவும் காட்டிக்கொள்ள இந்தியா எப்போதும் தயங்கியதில்லை. அண்டை நாடுகளான சார்க் ஒப்பந்த நாடுகள் மீது ஏதாவதொரு சாக்குப் போக்குக்-கூற ஆக்கிரமிப்புச் செய்யவும் தயாராகவும் இருக்கின்றது. இந்தியா இல்லா-விட்டால் சார்க் மாநாடு இல்லை என்ற நிலையே நிலவுகிறது. நடை-பெறவிருந்த ஆறாவது சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டமை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். இந்தியாவிற்கு ஆத்திரமூட்டும் இலங்கை அரசியல் எதிரி பிரேமதாசாவை அவமானப்படுத்தவே நரசிம்மராவ் வரமாட்டார் என்று அறிவிப்பாகும். இப்படிப்பட்ட நிலையில் இம்மாநாடு சாதிக்கப் போவது எதனை? என்பதே கேள்விக்குறியாகும்.

வல்லரசுகளின் ஆதிக்கத்திலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், வளர்த்துக் கொள்-ளவும் சிறிய நாடுகள் தங்களுக்குள் பிரதேச பாதுகாப்பு, ஒற்றுமை, பொரு-ளாதார உதவிகள் என்பவற்றிற்காக ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற அடிப்-படையில் தமக்குள் ஐக்கியப்பட வேண்டிய தேவை இந்நாடுகளுக்கு இருக்கின்றது. இவற்றை உள்நாட்டில் தேசிய இனங்களின் சுதந்திரத்-திற்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் மதிப்பளிக்கின்ற அரசுகளாலேயே செய்ய முடியும். ஏகாதிபத்தியங்களின் ஏவலர்களாக-வும் உள்நாட்டில் மக்களை ஒடுக்குபவர்களாகவும் ஜனநாயக உரி-மைகளையும் மறுதலிக்கின்ற இந்த சார்க் நாடுகளின் அரசுகளால் இவற்றை சாதிக்க முடியாது? அதேவேளை ஏகாதிபத்தியங்களும் இச் சிறிய நாடுகள் தங்கள் கைகளிலிருந்து தவறிவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றனர். இந்நாடுகளின் கூட்டமைப்புக்கள் -

31 ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணே உனக்குத்தான்

- சிவதிலக் -



இயந்திர நெருப்போடு
நெருப்பாக
'கிச்சின்' வேலையில்
காய்கறி வெட்டி
கை குறண்டி
பானைகள் தேய்த்து
தோள் கடுத்து
இடுப்பு உடையும்
எம்மவர்க்கு

இன்னும்
வெள்ளைக்காரனுக்காய்
காய்கறி வெட்டி
விரல் நலப்பு போனவனை
கூசாமல்
சொல்கின்றான்

எம் வீடு
எங்கிருந்தாலென்ன
வீட்டு வேலை
சமைத்து கூட்டி வாரி
கழுவுதல்
பெண்ணே
உனக்குத்தானாம்!

www.tamilarangam.net





# நால்வகை குணமும் நாமும்!

உலகெங்கும் உள்ள சமூகப்பிரச்சினைகளில் பெண்ணடிமைத்தனமும் முக்கிய பிரச்சினையாக உள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றும். பெண்ணடிமைத்தனத்தின் தோற்றமும் அதன் விளைவால் எமது சமூகத்தில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதும் எமது பெண்கள் நடைமுறை வாழ்க்கையில் பிரச்சினைகளை எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பது பற்றியும் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆதிகால மனித சமூகத்தின் ஆரம்பத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் எந்த விதமான பாகுபாடுகளும் இருக்கவில்லை. அன்றைய காலகட்டத்தில் இருவரும் சேர்ந்தே வேட்டையாடி உணவை சேகரிப்பதில் ஈடுபட்டனர். அப்படியான காலகட்டத்தில் பெண்கள் உணவு தேடுவதில் ஈடுபட்டதுமல்லாமல் அவற்றை பாதுகாப்பதும், முதியவர்களைப் பராமரித்தல் போன்ற மேலதிகமான அலுவல்களிலும் ஈடுபட்டமையால் அவளே அங்கு முக்கியமானவளாக கருதப்பட்டாள். எனவே அன்று நிலவிய சமூகம் தாய்வழிச்சமூகம் என அழைக்கப்பட்டது. அத்துடன் அன்று இருபாலாருக்கும் இடையிலான பாலியல் ரீதியான உறவு முறைகளிலும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் நிலவவில்லை. அன்றைய பெண் தன்னுடைய தகப்பனுடனும் மகனுடன்கூட உடலுறவு கொண்டவளாகக் காணப்பட்டாள்.

காலப்போக்கில் மனிதனின் அறிவு வளர்ச்சியடைய தனித்தனியாக பிரிந்து வாழ்ந்த மனிதர்கள் கூட்டம் கூட்டமாக சமூகமாக வாழத்தொடங்கினர். அப்போது உற்பத்திகள் பெருகின. பெருகிய உற்பத்திகள் உபரிகள் (மேலதிக வருமானம்) ஆயின. உபரி உழைப்புகளின் காரணமாக மனிதனுக்கு சொத்துக்கள் சேர்க்கும் ஆசையும் எழத் தொடங்கியது. சொத்துக்கள் சேர்க்கும் விருப்பத்தின் விளைவால் அச்சொத்துக்கள் தன் பிள்ளைக்கே

www.tamilarangam.net



போய் சேரவேண்டும் என்ற எண்ணமும் அவனுக்கு எழத்தொடங்குகிறது. எனவே தன்னுடன் உடலுறவில் ஈடுபட்ட பெண் இன்னோர் ஆணுடன் உடலுறவில் ஈடுபட்டால் தன்னுடைய பிள்ளையை அறிந்து கொள்ள முடியாது என்ற காரணத்தால் பெண்ணைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கிறான். எனவே தன்னுடன் உடலுறவில் ஈடுபட்ட பெண் இன்னொருவனுடன் உடலுறவு கொள்ளக்கூடாது எனக் கட்டுப்பாடுகள் விதிக்கிறான். இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட பெண் வீட்டு வேலைகள் செய்வதற்கும், குழந்தைகள், முதியவர்களை பராமரிப்பதற்கும், உணவு சமைப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டாள். இவ்வாறே பெண்ணடிமைத்தனத்தின் தோற்றம் ஆரம்பமாகியது.

இவ்வாறாக தோற்றம் பெற்ற பெண்ணடிமைத்தனமானது கலாச்சாரம் என்ற போர்வையில் எமது சமூகத்தில் எவ்வாறு தாக்கத்தை செலுத்துகிறது என்பது பற்றி பார்ப்போம். எமது சமூகத்தில் பெண்ணானவள் பருவமடைந்ததும் இயல்பாகவே சில கட்டுப்பாடுகளை போட்டு விடுகின்றார். பருவமடைந்ததன் பிறகு மற்றவர்களுடன் சுதந்திரமாக பழக வாய்ப்புகள் கிடைப்பதில்லை. வளர்ப்பு முறைகளை வைத்துப்பார்க்கும் போது ஆண்பிள்ளைகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் சுதந்திரமாக இயங்கவிடுவதும், பெண்பிள்ளைகளை அடக்கி வீட்டிற்குள் வைத்தும் வளர்க்கிறார்கள். பெண் என்றால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்கள் பொருந்தியவளாக இருக்கவேண்டும் என்று சிறுவயதிலிருந்து போதித்து வளர்க்கின்றனர். இதனால் எம் பெண்களில் அனேகமானோர் வெளியுலகமே தெரியாத பத்தாம்பசலிகளாக வளர்க்கப்படுகிறார்கள். எமது பெற்றோர்களில் பெரும்பாலானோர் பெண்பிள்ளைகளை கற்பிப்பதைவிட ஆண்பிள்ளைகளை கற்பிப்பதிலேயே ஆர்வமுள்ளவர்களாக உள்ளனர். பெண்பிள்ளை நீ படித்து என்ன செய்யப் போகிறாய் கடைசியில் அடுப்பு தானே ஊதப் போகிறாய் என்று கூறி பெண்பிள்ளைகள் கல்வி கற்பதையும் தடுத்து விடுகின்றனர். வீட்டிற்கு யாராவது விருந்தி

www.tamilarangam.net



வர்கள் வந்தாலும் பெண்பிள்ளைகள் எழுந்து போய்விட வேண்டும். பெற்றோர் கூப்பிட்டாலே ஒழிய வெளியே வரக்கூடாது. என்ற கட்டுப்பாடுகளும் பெண்களுக்கு விதிக்கப்படுகின்றன. "பெண்பிள்ளை சிரித்தால் போச்சு புகையிலை விரித்தால் போச்சு" என்ற பழமொழியும் இதனையே சித்தரிக்கின்றன.

இனி திருமண விடயமாக ஆண், பெண்களுக்கிடையிலான பாகுபாடுகள் எப்படியுள்ளன என்று பார்ப்போமானால் அங்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளமையை நாம் காணலாம். ஆண்கள் தமது வாழ்க்கைத்துணையை தேர்வு செய்வதற்கு கட்டுப்பாடுகள் மிகமிகக்குறைவே. பெண்ணைப் பேசிவிட்டு திருமணம் செய்ய முடிவாக முன்பு இந்தப் பெண்ணை உனக்குப் பிடித்திருக்கிறதா? என ஆணிடம் அவனது விருப்பத்தை முதன்மைபடுத்தி வினாவப்படுகிறது. அதேநேரத்தில் பெண்ணிற்கு திருமணம் பேசும்போது பெற்றோரே மணமகனை முடிவு செய்துவிட்டு திருமணத்திற்கான எல்லா ஏற்பாட்டையும் செய்துவிட்டே இவர்தான் உனது மணமகன் இவரைத்தான் நீ திருமணம் செய்ய வேண்டும் என்று கூறிவிடுவார்கள். இங்கு பெண்ணின் விருப்பு வெறுப்புகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதேயில்லை. அத்துடன் ஆண் தனக்கு பெண்ணைத் தெரிவு செய்யும் போது திருமணத்துக்கு முன்பேயே பெண்ணைப் பார்த்து பிடித்தால்தான் திருமணம் செய்து கொள்கிறான்.

எமது சமூகத்தின் கலாச்சாரம் என்றபோர்வையில் பெண்பார்க்கும் படலம் என்றசடங்கு உள்ளதும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும். ஆனால் அதே மாதிரியான உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆண்கள் மட்டும் சந்தையிலே மாட்டைப் பார்ப்பது போல் எத்தனை பெண்களையும் பார்த்து விட்டு தனக்கு மனதிற்கு பிடித்தவளை தெரிவு செய்து கொள்கிறான். ஆணிற்கு இருப்பதை போன்ற விருப்பு வெறுப்புகள் தானே பெண்ணிற்கும் இருக்கும் என்பதை எமது சமூகத்

www.tamilarangam.net



நபர்கள் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. ஆண்கள் மட்டும் தனக்கு அழகான பெண்தான் வேண்டும் என்று கூறும் போது பெண்கள் இந்த விடயத்தில் மௌனிகளாக இருப்பதற்கு காரணம் எமது கலாச்சாரமே. எமது சமூகத்தில் பெண்களும் தமக்கு அழகான ஆண்கள் தான் வாழ்க்கைத்துணையாக வரவேண்டும் என்று தமது விருப்பத்தினை தெரிவிப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. பெண்களது உணர்வுகள் மதிக்கப்படாமலேயே போய் விடுகின்றன. சமூகத்தின் கட்டுப்பாடுகளால் பெற்றோர் சொல்லும் மணமகனுடன் இணைந்து கொண்டு வாழ்ந்தே தீரவேண்டும் என்ற கட்டாயத்தின் பேரிலேயே பெரும்பான்மையான பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சாதாரணமான ஒரு பெண் பாடசாலைக்கோ அல்லது வேலைக்கோ செல்லும்போது ஒரு ஆண் தனது காதலை தெரிவித்துக் கொள்கிறான். அப்போது அவனது அழகு அந்தப் பெண்ணிற்கு பிடிக்கவில்லை என்றால் அவள் மறுப்பு தெரிவிக்கிறாள். ஆனால் அதே ஆணைப் பெற்றோர்கள் மணம் பேசிவிட்டு இவனைத்தான் திருமணம் செய்யவேண்டும் என்று கூறும் போது அதே ஆணையே திருமணம் செய்து கொண்டு அவனோடெவ் வாம் என்று வாழும் பெண்களும் எமது சமூகத்தில் காணப்படுகின்றனர்.

அடுத்து எமது கலாச்சாரத்தில் பெரும் பங்கை வகிக்கும் சடங்குகள் மூலம் பெண்களை எவ்வாறு ஒடுக்குகிறார்கள் என்று நோக்கும் போது திருமணச்சடங்கை எடுத்துக்கொள்வோம் திருமணங்களின் போது தாலியை அணிவிக்கும் சடங்கு முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. தாலி அணிவித்தல் முறை பெண்ணடிமைச் சின்னமாக உள்ளது. தாலி அணிவிப்பின்போது போடப்படுகின்ற மூன்று முடிச்சின் அர்த்தம் முதலாவது முடிச்சு பெற்றோருக்கு அடங்கியவளாகவும் இரண்டாவது முடிச்சு கணவனுக்கு அடங்கியவளாகவும் மூன்றாவது சமூகத்துக்கு கட்டுப்பட்டவளாகவும் இருக்க வேண்டும் என்பதே ஆகும். அடுத்ததாக அம்மி மிதிக்கும் சடங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கைப்பார்த்தால் அதன் அர்த்தம் வாழ்வில் அம்மிக்கல்லைப் போன்று கற்பு நெறியில் பெண் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். கற்பு நெறியை இருசாராருக்கும் பொதுவானதாக இல்லாமல் பெண்ணிற்கு மட்டுமான கட்டுப்பாடாக எமது சமூகம் அமைத்துள்ளது. அவ்வாறானால் ஆண்கள் திருமணத்தின் பிறகும் வேறு எவருடனும் பாலியல் ரீதியான உறவுகள் மேற்கொள்ளலாம் என்ற அங்கீகாரத்தை சமூகம் வழங்கியுள்ளதையே காட்டுகிறது. பெண் மட்டும் தாலியை கட்டியபின் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்றும் "கணவனே கண்கண்ட தெய்வம்" என்றும் போற்றி வாழவேண்டும் என்று கூறுகிறது. இவற்றை பெண்களுக்கு இலகுவில் போதிப்பதற்கு இலக்கியங்களை பயன்படுத்துகின்றனர். கண்ணகி கதை, புருஷன் கூடையில் வைத்து சுமந்து சென்ற நளாயினி கதை போன்ற இலக்கிய வடிவங்களினூடாகவும் சுலபமாக பெண்கள் மனதில் பதிய வைத்தனர்.

மாலை அணிவிக்கும் சடங்கின் போதும் கூட ஆண் அமர்ந்திருக்க பெண் எழுந்து நின்று மாலையை அணிவிப்பதும் மாறாக ஆண் இருந்தபடியே மாலையை அணிவிக்கும்போது பெண் குனிந்து மாலையை ஏற்றுக்கொள்வதும் பெண் அடக்கு முறைக்கான சடங்காகவே அமைந்துள்ளது.

எமது சமூகத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக சீதனப்பிரச்சினை மேலோங்கி நிற்கிறது. ஆரம்பத்தில் சீர் கொடுக்கும் முறையாகவே காணப்பட்ட இம்முறையானது காலப்போக்கில் சீதனம் கொடுத்தால்தான் பெண்களிற்கு திருமணம் நடைபெறும் என்ற நிலையில் கொண்டு வந்து விட்டுள்ளது. ஆண் பெண் இருவரும் திருமணம் செய்து வாழ்க்கையில் இணைந்து கொள்ளும் போது இருசாராருமே ஒரேவிதமான நன்மைகளை அடையப்போகின்றபோது பெண்களிடம் இருந்து மட்டும் ஏன் சீதனத்தை எதிர்பார்க்கின்றனர். எமது சமூகங்களின் பெரும்பா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வான குடும்பங்களில் ஆண்கள் மட்டுமே வேலைக்குப் போபவர்கள் ஆகவும் பெண்கள் வீட்டுவேலைகளையும் குடும்பங்களை பராமரிப்பவர்களாகவும் காண-ப்படுகின்றனர். இங்கு இருவருமே உடலுழைப்பில் ஈடுபட்டவர்களாகக் காணப்பட்டாலும் பெண்களின் உழைப்புக்கு எந்தவிதமான ஊதியமும் வழங்காது வீட்டுவேலைகளை செய்ய வேண்டியது அவளது கடமை எனக் கருதுகிறது. இருவருமே உடலுழைப்பில் ஈடுபடும் போது பெண்ணிடம் இருந்து மட்டும் ஏன் சீதனத்தை எதிர்பார்க்க வேண்டும்.

மாறாக இருவருமே ஒரே தரத்திலான கல்வியறிவும் ஒரேயளவு வருமானத்தைப் பெறும் தொழிலில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் கூட பெண் சீதனம் கொடுக்க வேண்டிய நிலையிலேயே எமது சமூகம் உள்ளது. சீதனப்பிரச்சனை அனைத்து எமதுசமூகத்தை பிடித்துள்ள கொடிய நோயாக விஸ்பரூபம் எடுத்துள்ளது.

சீதனப்பிரச்சினை மேலும் மேலும் வளர்வதற்கு ஆண்கள் மட்டுமே முழுமையான காரணகர்த்தாக்கள் என்றும் ஒட்டு மொத்தமாக கூறிவிடமுடியாது. இதற்குபெண்களும் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ காரணமாகின்றனர். என்ற உண்மையும் நாம் பார்க்கத் தவறிவிடக் கூடாது. மகனைப் பெற்ற தாய்மார்கள் தம் மகனுக்கு திருமணம் பேசும் போது சீதனவிடயத்தில் மிகவும் கறாராக உள்ளமையை நாம் சாதாரணமாகக் காணலாம். ஒவ்வொரு மாமிமார்களும் தாமும் ஒரு காலத்தில் மருமகளாக இருந்தவர்கள் என்பதை நினைத்துப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். உதாரணமாக வெளிநாட்டில் வாழும் தனது மகனுக்கு பெண் பார்க்கும்போது முதலில் குறிப்பிட்ட தொகையை சீதனமாக பேசிவிட்டு பெண்ணும் மாப்பிள்ளையும் தொலைபேசியிலோ, கடிதம் மூலமோ தொடர்பு கொண்டபின்னர் சீதனத் தொகையை மேலும் கூட்டித் தரும்படி கேட்கும் மாமிமார்களும் எமது சமூகத்தில் சர்வ

சாதாரணமாகவே காணப்படுகின்றனர். அத்துடன் பெண்களுக்கும் சொத்துக்களின் மீதுள்ள விருப்பத்தால் சீதனத்தை பெண் அடக்குமுறைக்கான காரணிகளில் அதுவும் முக்கிய பங்கை வகிக்கிறது என்பதைக் காணத்தவறிவிடுகின்றனர். சீதனக் கொடுமைகளால் திருமணமாக காலதாமதமாக திருமணமானவர்களும் கூட தங்களது ஆண் சகோதரர்களுக்கு திருமணம் பேசும்போது அதை ஏற்றுக்கொண்டு சீதனம் வாங்க சம்மதிப்பதும் கவலைக்குரிய ஒன்றாகவே உள்ளது. அனைத்து பெண்களும் தாம் சீதனம் கொடுக்காமல் திருமணம் செய்ய வேண்டும் உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்டு அதற்கெதிரான போராட்டத்தை மேற்கொள்வதன் மூலமே இப்பிரச்சினையை நீக்கமுடியும். சீதனப்பிரச்சனைக் கொடுமையின் உச்ச வெளிப்பாடே " ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்ற பழமொழி ஆகும்.

இதுவரையும் காலம் காலமாக இருந்து வந்த பிரச்சனைகளைப் பற்றிப்பார்த்தோம். இனி அன்றாட வாழ்க்கையில் பெண்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றனர் என நோக்குவோம். வேலைக்கு போகும் பெண்ணுக்கு திருமணம் ஆனால் அவள் தொடர்ந்தும் வேலைக்கு போவதா? இல்லையா என்பது அவளது கணவனின் விருப்பு வெறுப்பை பொறுத்தே அமைந்துள்ளது. பெரும்பாலான ஆண்கள் மனைவி வேலைக்குச் செல்வதை விரும்புவதில்லை. பெண்ணும் உழைத்தால் அவள் மீதான முழுமையான அடக்குமுறையை பிரயோகிக்க முடியாது என்பதே இதற்கு காரணமாகும். மாறாக இருவரும் வேலைக்கு போகும் குடும்பங்களாக இருந்தால் அங்கும் பெண்ணே கூடுதலான வேலைகளை செய்யவேண்டிய நிலையில் உள்ளாள். பெண் வேலைவிட்டு வந்தும் வீட்டுவேலைகளை கவனித்தலுடன் பிள்ளைகளை பராமரித்தல் போன்ற முக்கிய வேலைகளையும் அவளே செய்ய வேண்டிய நிலையில் உள்ளாள். இன்றைய சூழலில் வெளிநாட்டில் வாழும் ஆண்க

www.tamilarangam.net



ளிலும் பெரும்பாலானவர்கள் வீட்டு வேலைகளுக்கு உதவி செய்பவர்களாக காணப்படுகின்றனர் என்பதும் உண்மைதான் ஆனால் அப்படி இருப்பதற்கு காரணம் வெளிநாட்டில் ஆண் பெண் இருபாலாரும் உழைப்பில் ஈடுபடாவிட்டால் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாதுள்ளமையே காரணம். எனவே பெண்ணும் உழைத்தால் தான் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியும் என்பதனால் வேறு வழியின்றி வீட்டு வேலைகளில் பங்கெடுக்கின்றனர். ஆனால் நமது சொந்த நாட்டுக்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்படும் போது இந்த ஆண்களில் எத்தனை பேர் அங்கு அடுப்பு ஊத தயாராக உள்ளனர் என்றுபார்த்தால் விடை கேள்விக்குறியாகவே உள்ளது.

இதுவரை கலாச்சாரம் பண்பாடு என்ற ரீதியில் பெண்கள் ஒடுக்கப்படும் விதத்தைப் பற்றிபார்த்தோம். இந்நிலையில் பெண் விடுதலை என்பது மிக மிக அவசியம். தனித்தனியாக ஒரு சில பெண்கள் மட்டும் விழிப்புணர்வு கொண்டு செயற்படுவதனால் மட்டும் பெண் விடுதலை சாத்தியமாகிவிடாது. அனைத்து பெண்களும் விழிப்புணர்வுடன் ஒன்றுபட்டு ஒரு அமைப்பை அமைத்து அதன்மூலமே பெண் விடுதலைக்காக போராடுவது சாத்தியமாக இருக்கும்.

" மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை தன்னை கொளுத்துவோம் "

• உமையாள்

இடமின்மை காரணமாக ஞானக்கூத்தருடன்.... உரையாடல் இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் இடம் பெறும்.

ஆர் : குரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பேர்ணில்
# ஓர் கலை நிகழ்ச்சி



கார்த்தி

திகை மலர் பூத்தாற்போல் சுவிஸில் ஒரு கலை நிகழ்ச்சி. ஆம்! சுவிஸ் பாரதி கலைக்குழுவின் கார்த்திகைத் தீபங்கள் கலை நிகழ்ச்சி 9.11.1991 சனிக்கிழமை "பேர்ண்" (BERN) நகரில் இடம் பெற்றது.

தென்னிந்திய சினிமாக்காரர்கள் ஐரோப்பிய நாடுகளைச் சுற்றி வலம்வரும் இவ்வேளையிலும், புதிய திரைப்படங்களை 'தியேட்டர்'களில் திரையிட்ட போதும், சுமார் 400க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மண்டபத்தை நிறைத்திருந்தமை, எங்கள் கலைஞர்களின் நிகழ்ச்சிகளில் எம் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்திற்கு ஓர் ஆதாரமாகும்.

குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 20 நிமிடங்கள் தாமதமாக 3.20 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. பாரதி கலைக்குழுவின் சார்பில் தேவனின் நிகழ்ச்சி பற்றிய தொகுப்புரையைத் தொடர்ந்து முதல் நிகழ்ச்சியாக 'எண்ணங்கள்' தலைப்பில் கவியரங்கம்.

குப்பிளான் ஜெகன், ஞானி, சண், அருள் ஆகியோர் கவியரங்கில் பங்கெடுத்தனர். ஜெகனின் கவிதைகள் குறிப்பாக பெண்களின் பிரச்சனைகளை சுற்றி நின்றது. சீதனப்பிரச்சனைகள் மட்டுமன்றி 'வேசிகள்', தாசிகள் போன்ற பெண்பாற் சொற்களுக்கு ஆண்பாற் பதம் உண்டோ என்ற கேள்வியை எழுப்பி பண்பாட்டு ரீதியிலும் பெண்ணடிமைத்தனத்தின் தொடர்பை உணர்த்தினார்.

www.tamilarangam.net



நோனியின் கவிதைகள் சாதியப் பிரச்சனைகளை மையப் படுத்தி நின்றது. தர்க்க ரீதியில் சாதிபார்ப்பதில் அர்த்தமில்லை என்பதுடன் அது மனிதாபிமானமற்ற செயல் என்றும். பல ஒப்பீடுகளுடன் விளக்கிய அவரது கவிதைகள், ஐரோப்பியத் தமிழரிடையே உலாவும் சாதிப்பிரச்சனையையும் மேலோட்டமாகத் தொட்டுச் சென்றது. ஆனால் மக்களிடம் அந்நியப்பட்டு நிற்கும் தொனி கவிதையில் தென்பட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சுண் : நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் மண்டபத்தில் சனம் அவ்வளவாக இருக்கவில்லை; "சுஜித் வந்திருந்தால் மண்டபக் கதவுகளை ஒரு உதைக்கு உதைக்கியிருக்கும்" என்று சனத்தின் வருகைக்குறைவை ஒப்பிட்டு நகைச்சுவையாக கவிதையை ஆரம்பித்தார். வெளிநாடுகளில் எமது சிறுவர்களின் எதிர்காலம் பற்றிக் கூறிய அவரது கவிதைகள் இறுதிவரை நகைச்சுவையுடன் கூடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டது.

இறுதியாக அருளின் கவிதைகள், பெண்களின் பிரச்சனைகளில் குறிப்பாக சீதனப்பிரச்சனைகளை முழுமையான புதுக்கவிதை அம்சங்களுடன் துல்லியமாக விளக்கி நின்றது. கவிதை வாசிப்பில் அவரது அனுபவக் குறைவு கவிதையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு தடையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் இக் குறைபாடு நீக்கப் பெற்றால் பார்வையாளர் ஒரு நல்ல கவிஞனை இனங்காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

கவியரங்கை அடுத்து 'சுவிஸில் தமிழ்ப் பெண்களின் வேதனை' பற்றி மூர்த்தி மாஸ்ரர் எடுத்துக் கூறியமை வேதனையும் நகைச்சுவையும் கலந்த ஒரு நிகழ்வுவிவரணமாக இருந்தது.

www.tamilarangam.net


இந் நிகழ்வு விவரணம் ஏற்கனவே மனிதம் சஞ்சிகையில் ஜேர்த்திமாஸ்டர் எழுதிய "சுவிஸில் தமிழ்ப்பிஞ்சுகளின் வேதனை" என்னும் கட்டுரையையே உள்ளடக்கமாக கொண்டிருந்தது. பார்வையாளர்களைப் பொறுத்தவரை எமது குழந்தைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அறிந்து கொள்வதற்கும், இப்பிரச்சனை பற்றி விழிப்பை உள்ளத்தில் எழுப்புவதற்கும் நல்ல சந்தர்ப்பமாக அமைந்தாலும் இதற்கான தீர்வு என்ன என்பது தெளிவற்றதாகவே இருக்கிறது. விளம்பரத்தில் குறிப்பிட்டவண்ணம் இது ஒரு கருத்தாடலாக (வேறு பெற்றோர்களையும் உள்ளடக்கிய) அமைந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

கவிதா நிகழ்வு: கவிதா நிகழ்வு பற்றிய ஓர் அறிமுகத்தை தேவன் கொடுக்கும் போது உணர்வு பூர்வமாக கவிதையை எடுத்துச் சொல்வல் என்றும், ஈழத்தைப் பொறுத்தவரை முதன் முதலாக யாழ் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்நிகழ்வுக்கு வயது 10 வருடங்கள் என்றும் குறிப்பிட்டார்.

வசந்தக் கனவுகளுக்காய் என்ற தலைப்பில் மேற்குலகுக்கு நாம் வந்ததையும், இந்த வாழ்க்கைக்குட்பட்டு இந்நாடுகளில் எதிர் நோக்குகின்ற பல பிரச்சினைகளையும் தாய் மண்ணின் நிலைமைகளையும், எமக்கு ஒத்துவராத இந்த மண்ணில் நடத்தும் வாழ்க்கைப் போராட்டத்தினையும், சொந்த முகமிழந்து உளவியல் பாதிப்புக்குட்பட்டுத் துயருறும் - எங்கள் நிலைமைகளை வெளிப்படுத்த -வளர்ந்து வருபவர்கள் தொடக்கம் முதிர்ந்தவர்கள் வரையிலான 20க்கும் மேற்பட்ட கவிஞர்களின் பகுதிக் கவிதைகளை 'கொலாஜ்' முறையில் ஒருங்கே இணைத்துக்கொண்டது இக்கவிதா நிகழ்வு.




இரு பெண்கள் உட்பட நால்வர் பங்கு பற்றினர். வேட்டி சேட்டுகளுடன் ஆண்களும், பெண்கள் சேலை உடுத்தும் மண் வாசனை கமழ மேடையில் தோன்றிய போது இந்நிகழ்வு தாய் நாட்டில் நடந்தது போன்ற உணர்வைக் கொடுத்தது.

எங்களையே அந்நியகத்தில் குறிப்பிட்டது போன்று உண்மையில் பார்வையாளர்களை புல்லரிக்கச் செய்தது.

இந்நாடுகளுக்கு வந்து சேர்ந்த முறையினை

"ரோயலருப் பெட்டிக்குள்

கண் இறுக மூடிக்

கருப்பைக்குள் கிடக்கும் சிசு போல" என்று வரிகள் பெண்குரலில் ஒலித்த போது மிகவும் அனுதாபத்துடன் கூடிய வேதனையைக் கொடுத்தது.

இவ்வாறு பார்வையாளர்களைப் புல்லரிக்கச் செய்த பல சந்தர்ப்பங்களை உதாரணப்படுத்தலாம்.

நிகழ்ச்சிகளுடன் ஒன்றிப் போன பார்வையாளர்கள் "நாம் வாழவே எழுந்தோம் - சாவை உதைத்து" என்று கூவி ஐவரும் முஷ்டிகளை உயர்த்திய போது நிகழ்ச்சி முடிவுற்றதாக

www.tamilarangam.net


நினைத்து கரகோசமெழுப்பினர். ஆனால் நிகழ்ச்சி பின்பும் தொடர்ந்தது "நமக்கோ இரவல் நாட்டில் அந்நிய வாழ்வு

நம் மக்களுக்கோ சொந்த நாட்டில் அந்நிய இருப்பு" என்று முடிவுறுவது 'வசந்தக்கனவுகளுக்காய்' என்று வந்த எமது வாழ்க்கை அவலத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

சில சந்தர்ப்பங்களில் பயிற்சி பற்றாக்குறை காரணமாகவோ என்னவோ மாற்றத்தை யோசித்துக் கூறுவது போன்ற உணர்வு சிலரிடம் வெளிப்பட்டது. இசைப் பற்றாக்குறையும், சில சந்தர்ப்பங்களில் இசை பொருத்தமற்ற தன்மையும் இந் நிகழ்ச்சியில் ஏற்பட்ட சில குறைபாடுகள் ஆகும்.

ஒட்டு மொத்தத்தில் இப்புதிய நிகழ்ச்சிக்கு சபையோர் மத்தியில் ஒரு வித உற்சாகத்தையும், இத்தகைய நிகழ்ச்சிகளை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் உண்டு பண்ணியுள்ளது.

இக் கலைமாலைப் பொழுதில் இடம் பெற்ற நாடகம் "எவர் தர்மராஜா"?

"இயமதர்மராஜா" புராண நாடக வடிவம். அதே யமன் அதே சித்திரகுப்தன், பூலோகத்தில் இருந்தவர்களை சித்திரகுப்தன் அழைத்து அவர் பற்றிய விபரத்தைகூற யமன் விசாரணை செய்து தண்டனை வழங்குவது.

எமது சமூகப் பிரச்சனைகளை குறிப்பாக இயக்கங்கள் எமது மண்ணில் மேலாண்மை செலுத்த ஆரம்பித்த 1984ம் ஆண்டுப் பகுதியில் இருந்து இன்று வரை (ராஜினி திரணகம-முஸ்லீம் மக்கள் உட்பட) இருந்தவர்களை புதிய படிமங்களுடனும், குறியீட்டு வடிவங்களுடனும் வெளிப்படுத்தி அவர்களை விசாரணை செய்து தண்டனை வழங்குவதுதான் "எவர் தர்மராஜா" நாடகத்தின் உட்பொருள்.

www.tamilarangam.net



எங்கள் தேசத்தின் நிலைமைகளை வெளிப்படுத்தும் முதற்க் காட்சியில் வேலையில்லாப் பிரச்சனை, பொருளாதாரப்பிரச்சனை என்பவை பாசிசமும் மேலோங்கி நிற்க ஜனநாயகம் உதைபடுகிற போது தேசம் மயக்கமுற்று விழுகின்றது.

இம் முதற்காட்சியில் எமது தேசத்தின் மையப் பிரச்சனையாக விளங்கும். இனப்பிரச்சனைக்கான படிமம் வெளிப்படுத்தப்படாமை, நாடகத்தின் ஆரம்பத்தில் காணப்படும் பாரிய குறைபாடு எனலாம். எங்கள் தேசத்தின் நிலைமைகளை சாதாரண குடிமகனாக வரும் 'நரேந்திரர்' விளக்கிச் செல்லத் தர்மராஜா ஆட்டத்துடன் மேடைக்கு வருகிறார்.

நாடகத்தின் ஒரு சந்தர்ப்பத்தில் ஆயுதம் தாங்கிய இளைஞன் ஒருவன். அழைக்கப்படுகிறான். "அவர் வைத்திருக்கும் ஒரு கருவியால் அவருக்குச் சுடமட்டும்தான் தெரியும். ஏன் சுடுகிறோம் என்று கேள்வி கூடக் கேட்டுப்பழக்கப்படாதவராகவே இவர் இருந்தார்" போன்ற விபரங்களைச் சித்திரகுப்தன் கூறியமை நகைச்சுவையுடன் கூடிய உண்மையாகி சபையில் சிரிப்பொலியை உண்டு பண்ணியது.


நகைச்சுவை மட்டுமன்றி, வேதனையும், துயரமும் நிறைந்த எங்கள் மண்ணின் அவலங்களை வெளிப்படுத்தும் பல சந்தர்ப்பங்கள் நாடகத்தில் காட்சி தருகின்றன.

இயமனும், சித்திரகுப்தனும் பூலோகம் செல்லும் காட்சியும், பூலோகத்தின் கொடுமைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது " இன்னும் எமது மண்ணில் பச்சைரத்தம் பாய்கிறது, உண்மை இழந்தவர் நாம் உள்ளத்தில் ஓர் வெறுப்பு" என்னும் பாடல் இதயத்தை அழுத்தும் காட்சியாகவே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

www.tamilarangam.net


சாதாரணமாக அரசியல் பிரச்சினைகளை மையப் படுத்தும் நாடகங்கள், பிரச்சாரப் பாண்க்குட்பட்டு அதன் கலைத்துவத்தை இழந்து போவது வழக்கம் ஆனால் இந்நாடகத்தைப் பொறுத்தவரை நடிப்பு, மேடையமைப்பு, அலங்காரம், மேக்கப் இசை அரிய அனைத்துமாக நாடகத்திற்கு இருக்ககூடிய கலை வடிவம் வேணப்படுகின்றது. பார்வையாளர்களைச் சிந்திக்கத் தூண்டும் பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. நாடகத்தைப் பார்ப்பதில் பார்வையாளர்களுக்கு சோர்வை ஏற்படுத்தவில்லை ஆனால் சில குறியீடுகள் பார்வையாளர்களுக்கு விளங்கியிருக்குமா என்பதுதான் கேள்வி! குறியீட்டு வடிவங்களை உள்ளடக்கிய நாடகங்களை அறிமுகப்படுத்தும் போது குறியீட்டு வடிவம் என்றால் என்ன என்பதை விளங்கவைக்கும் சில உதாரணங்களை அறிமுகம் செய்து அதற்கு விளக்கமும் கொடுத்து நாடகத்தை தொடங்குவது நல்லது என்பது சபையோர் பலரது கருத்தில் அமைந்தது. பாஸ்கரனின் நெறியாள்கையையும், நாடகம் முழுவதும் தொடர்ந்து நடிக்கும் யமன், சித்திரகுப்தனையும் நாடகத்தை உருவாக்கம் செய்த தேவனையும் விசேடமாகப் பாராட்டியே ஆகவேண்டும்.





www.tamilarangam.net


இசை நிகழ்ச்சி : முழுமையான தமிழ் சினிமாப்பாடல்களை மட்டும் கேட்டுப் பழக்கப்பட்டுப் போன எம்மக்கள் மத்தியில் "நியூ ரோன்ஸ்" இசைக்குழு சிறிது வேறுபட்ட அம்சங்களுடன் மேடைக்கு வந்து பாராட்டையும் பெற்றுக்கொண்டது. சினிமாப்பாடல்களாக இருந்தாலும் தெரிவுசெய்யப்பட்ட குறிப்பாக 'ஒளிமயமான எதிர்காலம்', அதோ அந்தப் பறவை போல, தோல்வி நிலையென நினைத்தால் போன்ற நல்ல கருத்தாழ மிக்க பாடல்களும் நமது நாட்டுப் புற மெல்லிசைக்கும், சங்கீதப்பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தமை மிகவும் பாராட்டத் தக்கது.

"நியூ ரோன்ஸ்" இசைக்குழுவினர் தொடர்ந்து சினிமாப் பாடல்களில் தங்கியிருப்பதை தவிர்த்து, எமது சமூகப் பிரச்சனை தாங்கி வரும் பல புதிய பாடல்களுக்கும் இன்னும் பல கிராமியப் பாடல்களுக்கும் இசைவடிவம் கொடுப்பதில் மிகுந்த ஆர்வம் செலுத்தினால், தமது பெயருக்கு ஏற்ப ஒரு புதிய ஒருவராக ஒலிக்க முடியும்.

வேலையும் வீடும் என்று இயந்திரமயப்பட்ட இவ் வாழ்வியல் சூழலில் பாரதி கலைக்குழுவின் இந்நிகழ்ச்சி ஒரு பாரிய முயற்சியே. இருந்தும் புதியவர்கள் என்றவகையில் சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றது. குறிப்பாக தேவனின் நிகழ்ச்சித் தொகுப்புரை, ஆரம்பத்தில் போதியதாக அமையவில்லை. வெறுமனே விளம்பரத்தை வாசித்தது போல் இருந்தது. ஆனால் நிகழ்ச்சியின் பிற்பகுதியில் குறிப்பாக இசை நிகழ்ச்சியின் போது பார்வையாளர்களுடன் சேர்ந்து, அவர்களிடம் இருந்தே கேள்விகளைக் கேட்டு பதிலைப் பெறும் வகையிலான ஒரு பாணியை கடைப்பிடித்தமை ஒரு புதிய அம்சமாகும். இத்துறையில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

www.tamilarangam.net


நிகழ்ச்சிக்காக செய்யப்பட்ட விளம்பரத்தில் கூட மயக்கத்தை உண்டுபண்ணும் வாக்கியத்தை உள்ளடக்கியிருந்தமை கவனத்தில் கொள்ள வேண்டும் குறிப்பாக "தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களின் படையெடுப்புகள் நடுவே எம்மில் வளர்ந்து .........." என்ற வாக்கியம் சினிமா நடிகர்களுடன் சேர்ந்து நடத்தும் விழா என்றும் தவறான கருத்தை பலருக்கு உண்டுபண்ணியுள்ளது.

மேலும் பாரதி கலைக்குழு, சுவிஸில் உள்ள பலவித கலைஞர்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு குழுவடிவில் இருந்து தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சிகளை பல இடங்களிலும், வேண்டுமானால் வேறு ஐரோப்பிய நாடுகளிலும் நடத்துவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

தொடர்ந்து சமூகப் பிரக்ஞைபூர்வமான உள்ளடக்கங்களைக் கொண்ட பலவிதமான கலைவடிவங்களையும் அரங்கம் செய்வதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். • வி. லோகதாஸ்

13ம் பக்கத் தொடர்....******************************

தங்களுக்கெதிராய் திரும்பும் சமயங்களில் அவற்றைக் கூப்பிடத்தயங்குவதில்லை.

எழுபதுகளில் தனித்துவமாக விளங்கிய மத்திய கிழக்கு நாடுகளின் அமைப்பான 'ஒபெக்' அமெரிக்க உளவு தாபனமான C.I.Aயின் சதிவேலைகளால் செயலிழக்கப்பட்டமை நல்ல உதாரணமாகும். இன்று ஐரோப்பியர், ஐரோப்பா எங்கும் வாழலாம் என்ற அடிப்படையில் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றனர். இது உலக சந்தைப் போட்டி , அமெரிக்க, ஜப்பான் நாடுகளுக்கு சவாலாகவும் அதேசமயம் ஐரோப்பிய சமூகங்களில் ஜேர்மனின் ஆதிக்கமும் அச்சுறுத்தலாகவுமே இருக்கின்றது. சார்க் நாடுகளின் நோக்கில் இந்த ஐரோப்பிய சமூகங்களை முன்மாதிரியாகக்கொள்ள வேண்டும் என்ற கருத்து மட்டுமே நிலவுகிறது. இந்த ஒரு கவனம் மட்டும் சார்க் நட்புறவிலும் ஐக்கியத்திலும் எதையும் செய்துவிடப் போவதில்லை என்பதே நடைமுறையாகும்.

• எஸ்.வசந்தன்-

www.tamilarangam.net



## வாசகர் கடிதம்

'மனிதம்' நான் தவறாது வாசித்து வருபவன் உங்கள் மனிதத்தில் நிறை இருப்பது போல குறையும் இருக்கிறது. அதை வெளிக்காட்டி எழுத வாசகர்களாகிய எங்களுக்கு உரிமை இருப்பதாக நினைக்கின்றேன். ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டால் அதில் இருக்கும் நிறைகளை நீங்கள் கூற தவறிவிடுகின்றீர்கள் குறைகளை தேடிப்பிடித்து எழுதிவிடுகின்றீர்கள். மற்றது மடிப்பு எழுதும் பழக்கமும் உங்களிடம் இருக்கு. ஏதோ ஒரு சக்திக்குப் பயந்து அப்படி எழுதுவது போல் இருக்கு.

திரைப்படங்களை விமர்சிக்கும் போதும் அதில் காணப்படும் குறைகளையே எழுதுகின்றீர்கள் நிறைகளை எழுத தவறிவிடுகின்றீர்கள். "என்னுயிர் தோழன்" படத்தை எடுத்துக்கொண்டால் சேரிப்புற பகுதியை கொஞ்சமாவது பாரதிராஜா வெளிக்காட்டியுள்ளார். அதே போல் அரசியல் வாதிகளையும் அவர்களின் நடவடிக்கைகளையும் காட்டுகிறார். ஆனால் நீங்கள் பாரதிராஜா முழுமையாக வெளிக்காட்டவில்லை என்று எழுதியிருக்கின்றீர்கள். அவருக்கும் பயம் என்று ஒரு காரணம் இருக்கும் தானே. கொஞ்சமாவது வெளிக்காட்டியுள்ளாரே என்று சந்தோசப்படவேண்டும். அதேபோல் சின்னத்தம்பியையும் எடுத்துக்கொண்டால். சாத்திரம் என்ற கருத்திற்கு முக்கியம் கொடுத்திருப்பதாக நீங்கள் எழுதியிருந்தீர்கள் அதைப் புறக்கணித்து விட்டுப் பாருங்கள் பெண் அடிமைத்தனம் தான் அதில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. அந்தப்படத்தைப் பார்த்த மக்கள் திருந்துவதற்குத் தான் சந்தர்ப்பம் உள்ளதே தவிர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதைப்பார்த்து அந்த வழியில் நடக்க இருக்கும் மக்கள் அப்படி புத்தி கெட்டவர்கள் அல்ல. இப்போது மக்கள் திரைப்படத்தை ஒரு பொழுது போக்காகத்தான் பார்க்கிறார்களே தவிர அதேபோல வாழவேண்டும் என்று ஒருவரும் நினைக்கமாட்டார்கள். இந்த விமர்சனங்களை நான் முன்னரே எழுதலாம் என்று இருந்தேன் ஆனால் பயம் விடவில்லை. முதல் முறையாக இந்த அபிப்ராயத்தை எழுதுகின்றேன்.

● இகா: சுரிச்

அரசியல், இலக்கியம் என்று ஆக்கபூர்வமான விமர்சனத்தை தரும் இதழ்கள் வெளிவருவது சிரமம் தான். இத்தகைய நிலையில் உங்களது 'மனிதம்' சிறப்புற்றிருக்கிறது. என்பதே எனது கருத்து.

எமது அமைப்பு மூலமும் இளைஞர்கள் மத்தியில் அரசியல், இலக்கியம் போன்ற துறைகளில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்கிறது. பொதுவாக இவ்விரண்டிலும் இன்று எம் சமூகத்தின் மத்தியில் ஒரு விழிப்பு நிலை இப்பொழுது தென்படுகிறது. எமது முயற்சி தொடர உங்கள் 'மனிதம்' - எம்முடன் கைகோர்த்து செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

'மனிதம் இதழை தொடர்ந்து' எங்களுக்கு அனுப்புங்கள் அவையில் இருந்து வெளியாகும் ஏனைய இதழ்களையும் நாம் பெற்றுக்கொள்ள உதவுங்கள். இன ஐக்கியம், பரஸ்பர புரிந்துணர்வு என்பன வெறும் அலங்கார வார்த்தைகளாகிக் கொண்டிருக்கும் இன்றைய இலங்கையில் அர்த்தமுள்ள ஒரு சமூகத்தை காண நாம் விரும்புகிறோம்.

● எஸ்.எம். இஸ்மையில்

தங்களின் புரட்டாதி-ஐப்பசி மனிதம் இதழ்கண்டேன் அதில் "என்றுமே எங்கள்-----" என்ற தலைப்பில் ஒரு அரைச்சிறுகதையையும், சமூகக்கண்ணோட்டம் நிறைந்த கட்டுரையையும் வாசித்தேன். வீ. லோகதாசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். தமிழன் எங்கு சென்றாலும் தன்னுடன் உயிர்போலப் போற்றிக் காப்பாற்றி வரும் சில விசயங்கள். சாதி வெறி பொறாமை, சீதனம், ஏளனம் செய்தல். அண்மையில் LUZERN நகரில் நடைபெற்ற சம்பவம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்க

www.tamilarangam.net


ளோ தெரியாது. ஆயினும் எழுதுகின்றேன். அந்நகரில் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த இளைஞன் ஒருவன் கோட், சூட்டுடன் போய்க் கொண்டிருந்தான். இதைக் கண்டு பொறுக்க முடியாத உயர்சாதினர (?) கூறப்படுபவர்கள் சிலர் அவனைப்பார்த்து " பள்ளனும் நளவனும் கோட்சூட் போட்டுக் கொண்டு பெரிய லெவலிலை போறாங்கள் " என்று தங்கள் " இனப் பெருமையை " நிலை நிறுத்தினர். இதைக் கேட்டு " தாழ்த்தப்பட்ட " இளைஞர்கள் அவர்களுடன் நியாயமான முறையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர், இடையில் பெரிய கைகலப்பில் முடிந்தது. இப்படியாக எமது தமிழர்கள் சென்ற இடமெல்லாம் சாதிப் பயிரை வளர்த்து வருகிறார்கள். மேலும் இங்கு இன்னும் ஒரு புதுவிதமான சாதிப்பாகுபாடும் நிலவி நன்கு வளர்ந்து வருகின்றது. ஆம், பழைய ஆட்கள், புதிய ஆட்கள் என்ற சித்தாந்தம் ..........."

• பெயர் குறிப்பிடாத கடிதம்.

வாசகரே ; பெயர் முகவரி இல்லாத மொட்டைக் கடிதங்களோ, ஆக்கங்களோ ஆ.சிவன் பார்வைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இருந்தும் தங்களின் மொட்டைக்கடிதம் உண்மையாய் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை குறிப்பிடுவதால் பிரசுரித்துள்ளோம். நீங்கள் பெயர் குறிப்பிடவிரும்பாத பட்சத்திலும்; எம்மோடு கருத்துப் பரிமாறல்களைச் செய்யலாம்.

• ஆர்-குரு

மன்றம் ஜனரஞ்சகமாக வருவதை ஆக்கங்களில் இருந்து அறியமுடிகின்றது குறிப்பாக தலையங்கங்களின் தெளிவும், தூரப்பார்வையும் தென்படுகின்றன. மன்றம் இன்னும் பலவகைக் கருத்துக்களுடாகத் தமிழ் சமூகத்தைத் தட்டியெழுப்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பே எனது நம்பிக்கையாகவுள்ளது

• S. நாகேஸ்வரன், ஜேர்மனி.

மரம் போன்று வளரும் மன்றத்திற்கு கிளை போன்ற இன்னும் பல ஆக்கங்களை ( வரதட்சணை, மூடநம்பிக்கை, அடக்குமுறை) சூடி மலர் போல மணம் வீசிட வாழ்த்துகின்றேன்

• பாஸ்கரன்.

www.tamilarangam.net



விவாதம்:

# இலங்கையிலிருந்து...

அன்புடன் ஆசிரியருக்கு,

மனிதம் இதழ்-12 பார்த்தேன். அதில் வெளிவந்த ஞானக்கூத்தருடன் என்ற கலந்துரையாடல் பாணியிலான கட்டுரை தொடர்பாக எனது கருத்துக்கள்

சுப்பிரமணியம்.

ஒரு தற்கொலைத் தாக்குதல் பொதுமக்களைப் பற்றியோ அல்லது அதன் விளைவுகளைப் பற்றியோ கவலைப்படாமல் தாக்கவேண்டும் என்ற நோக்கை மட்டும் கொண்டிருக்குமாயின், அத் தாக்குதல் யாருக்கு எதிராக நடத்தப்படுகின்றதோ அவர்களைத் திணறடிக்கும் என்பது உண்மைதான். தற்கொலைப் பாணியிலான தாக்குதல் மட்டுமல்ல, மேற்கூறிய நோக்கில் நடத்தப்படும் எத் தாக்குதல்களும் எதிரியைத் திணறடிக்கும். இதில் புலிகளுக்கு நமது இழப்புக்களைப் பற்றிக்கூட கவலையில்லை. அண்மையில் கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல் பற்றி - அதாவது கூட்டுப்படைத் தலைமையகம் மீதான - ஞானக்கூத்தர் பின்வருமாறு கூறுகிறார். "---எப்படி இருப்பினும் நடத்தப்பட்ட இத் தாக்குதல் சரியானதே." மேலும் சொல்கிறார். "---கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்திற்கு பதிலடியாக சிங்கள மக்களை படுகொலை செய்வதைவிட இத்தகைய நிலைகளை தாக்குவது சிறந்ததானே. நீ கருதுவதுபோல் கொழும்பில் தமிழ்மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால் கொழும்பில் எங்குமே தாக்குதல் நடத்தக்கூடாது...."

இதற்குப் பதில் சொல்வதற்குமுன் கொக்கட்டிச் சோலை படுகொலைச் சம்பவத்தைப் பற்றி சற்று பார்ப்போம்.

www.tamilarangam.net



கொக்கட்டிச்சோலையில் கண்ணிவெடி வைக்கக்கூடிய இடங்கள் பல இருந்தும் அங்கெல்லாம் வைக்காமல் குடிமக்கள் வாழும் பகுதியில்தான் புலிகள் கண்ணிவெடி வைத்தார்கள். கண்ணிவெடி வெடித்த பின்னர் புலிகள் காட்டுக்குள் ஒழிவிட்டனர். இராணுவம் அட்டகாசம் செய்துவிட்டு முகாமிற்கு சென்று சிலமணிநேரம் கழித்து திரும்பவும் வந்து படுகொலையில் ஈடுபட்டனர். அவ் இடத்திற்கு - கண்ணிவெடி வைத்த இடத்துக்கு - ஆயுதங்களுடன் வந்த முன்னாள் PLOTE உறுப்பினர்கள் (இவர்களும் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமில் இருந்தனர்) நிராயுதபாணியாக்கப்பட்ட உடன் நடக்கப்போகும் விபரீதத்தை உணர்ந்து, கொக்கட்டிச்சோலைக்குச் சென்று மக்களை ஒழிவிடும்படி கூறினர். படுகொலை நடக்கும்வரை காடுகளில் ஒளித்திருந்த புலிகள் மறுநாள் வீடியோ கமராவுடன் வந்து நடந்துமுடிந்த படுகொலையைப் படம்பிடித்துச் சென்றனர்.

இங்கு புலிகளின் ஒரு தாக்குதலை எடுத்துவைத்து சரியா பிழையா என ஆராய்வது சரியானதன்று. மொத்தப் போராட்டப் போக்கில் புலிகளின் பாத்திரம் என்ன? அவர்களது அரசியல் என்ன? அதன் விளைவுகள் என்ன? என்பதைப் பொறுத்தே இத் தாக்குதல்களையும் நோக்க வேண்டும். கொக்கட்டிச்சோலையில் கண்ணிவெடி வைத்த புலிகளுக்கு மக்களைப் பாதுகாக்கும் நோக்கம் இருந்திருப்பின், மக்களுக்கு முன்னரே சொல்லியிருக்கலாம். அல்லது கண்ணிவெடி வைத்தபின்னர் இராணுவம் தாக்குதல் நடத்த வரும்போது வழிமறித்து தாக்கியிருக்கலாம். அதுவும் முடியாது போயிருப்பின் இராணுவம் வருவதை சிறிது தாமதமாக்கும் நோக்கில் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கலாம். அந்த இடைவெளியைப் பாவித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றிருப்பார்கள். இவற்றில் எதையுமே புலிகள் செய்யவில்லை. மாறாக சம்பவம் முடிந்த மறுநாள் விடியோவில் படம் எடுத்துச் சென்றார்கள். இது தமது பிரச்சாரத்திற்காக!. கொக்கட்டிச்சோலையில் மட்டுமல்ல புலிகள் எல்லா இடங்களிலுமே இதைத்தான் செய்துவருகின்றார்கள். பாரிய அழிவுகளுக்கு தூண்டுகோலாக இருப்பது; பின் அவற்றை மறைக்க வேறு தாக்குதல்களை மேற்கொள்வது என்பது புலிகளின் முறை. ஆனால் இம்முறை புலிகள் கூட்டுப்படைத் தலைமையகத்தின்மீது நடத்திய தாக்குதல் கொக்கட்டிச்சோலைச் சம்பவத்திற்கு பதில் கொடுக்குமுகமாகவா என்பது வேறு பிரச்சினையாக உள்ளது. சிவில் இலிருந்து ஞானக்கூத்தரும் நக்கீரனும் அதற்காகத்தான் என எண்ணி மனஅமைதி அடையலாம்; இம் மாதிரியான தாக்குதல்களை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இங்கு இருக்கும் மக்களது பார்வையும் அபிப்பிராயமும் அதற்கு மாறானது.

அண்மைக் காலத்தில் மட்டுமல்ல புலிகள் முன்பும் கொழும்பில் சில தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். புலிகள் தமக்கு நெருக்கடி நேரும்போதெல்லாம் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டு, இலங்கையில் இனக்கலவரம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்து வருகின்றனர். இனக்கலவரம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் தமிழ்மக்களுக்கு பாதுகாப்பான இடம் வடக்கு கிழக்குதான் என ஒரு அபிப்பிராயத்தை ஏற்பட வைப்பதும், தமிழீழக் கோரிக்கையையும் தம்மையும் சர்வதேச ரீதியாக நியாயப்படுத்த இனக்கலவரம் என்ற குறுக்குவழியின் மூலம் முடியும் என்றும் புலிகள் நம்புகிறார்கள். இக் காரணங்கள் மட்டுமல்லாது,

www.tamilarangam.net



அரசுக்கு இனக்கலவரம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் சர்வ-தேச ரீதியாக சிக்கலை உருவாக்குவது, தம்மை இராணுவ ரீதியாக எதுவும் செய்ய முடியாது என்பதைக் காட்ட இராணுவ ரீதியில் பதில் சொல்வது, அவலங்கள் மத்தியில் வாழும் தமிழ்மக்களின் கவனத்தை திசைதிருப்புவது போன்ற காரணங்களுக்காகவும் இத் தாக்குதலின் புலிகளுக்கு தேவையாக இருக்கின்றது.

இத் தாக்குதல்களில் மக்கள் அழிந்துபோவதைப் பற்றி புலிகள் கவலைப்படுவதே இல்லை. மாறாக மறைமுக-மாக தூண்டிவிடுகிறார்கள். இதே முறை முஸ்லிம் மக்கள்மீதும் பிரயோகிக்கப்பட்டது. இந்தப் போராட்டப் போக்கில் மக்கள் பலப்படுவதற்குப் பதிலாக பலவீனப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. தொடர்ந்தும் பலவீனப் படுத்தப்படும் நம்பிக்கையீனத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். வெளிப்பார்வைக்கு உறுதியாகத் தெரியும் இப் போராட்டம் உள்ளார்ந்தமாக பலவீனப் படுத்தப் பட்டிருப்பதை ஞானக்-கூத்தனும் நக்கீரனும் புரியமுடியாமல் இருக்கலாம். இங்கு இருக்கும் எம்மால் இவற்றைப் புரியமுடிகிறது. மக்கள் வெறும் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டதைப் பார்க்க முடிகிறது.

இங்கு பிரச்சினை குண்டை கொழும்பில் வைப்பதா அல்லது வேறு எங்கும் வைப்பதா என்பதல்ல. இப் போராட்டப் போக்கு தமிழ்மக்களுக்கு என்ன செய்கின்றது என்பதே! இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்கு-முறையிலிருந்தும் படுகொலைகளிலிருந்தும் விடுபட்டு சுதந்திர-மாகவும் பாதுகாப்பாகவும் வாழவுமே வடக்கு கிழக்கு மக்க-ளின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஆரம்பமானது. ஆனால் இன்று போராட்டமானது திசைமாறி முழுச் சமூகமுமே

46ம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net



# தடியும் நோகாமல் பாம்பும்...



[அமெரிக்க வெளியுறவு அமைச்சரும் இஸ்ரேலியப் பிரதமரும்]

அக்டோபர் 30. சர்வதேச செய்தி தொடர்பியலாளர்களின் கவனம் முழுவதும் ஸ்பெயினின் தலைநகரமான மட்ரிட்டில் இருந்தது. 5000 க்கும் அதிகமான நிருபர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும் ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய அரண்மனை ஒன்றை புடை சூழ நின்றனர். இதிரைகளில் விசேட கமாண்டோக்கள் பாதுகாப்பிற்காய் வலம் வந்தனர். கவச வண்டிகளும் கூட மாநாட்டு மண்டபத்தை அண்டியும் நகரிலும் நிறுத்தப்பட்டிருந்தன. இத்தனை ஏற்பாடுகளும் எதற்காக தெரியுமா?

இங்கே தான் 43 வருடகால இஸ்ரேலிய அரேபிய பரம எதிரிகள் நேருக்கு நேராய் ஒரே மேடையில் சந்தித்துக் கொண்டனர். மத்திய கிழக்கில் அமைதியையும் சமாதானத்தையும் உண்டு பண்ணுவதற்காக பாலஸ்தீன மக்களின் வாழ்வில் சுதந்திரக் காற்றை பேச்சுவார்த்தை மூலம் உறுதி செய்வதற்காக அமெரிக்காவினால் ஏற்பாடு செய்யப்பட்டது இந்த மாநாடு. 3 நாட்கள் மட்டுமே நீடித்தன.

பனிப்போர் முடிவுற்றது. அமெரிக்கா-

www.tamilarangam.net


சோவியத் யூனியன் நட்பும் இனிமையாகி விட்டது. ஐக்கிய ஜேர்மனியும் உருவாகியுள்ளது. ஐரோப்பா-வும் 12 நாடுகளை இணைத்து பிராந்திய ஐக்கியத்தை கட்டத் தொடங்கி விட்டது. உலகம் அமைதியை நோக்கி விரைகிறது. இந்த வரிசையில் மத்திய கிழக்கு சமாதான மகாநாடு என்றெல்லாம் எழுதிக் குவித்தன பத்திரிகைகள். குறிப்பிடத்தக்க செய்தி அமெரிக்க சோவியத் அதிபர்களின் நேரடி ஆசிர்வாதத்துடன் மாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான்.

43 ஆண்டுகளாக 6 யுத்தங்களை சந்தித்தும் இன்னமும் தீர்வு எதுவுமே காணப்படாமல் அமைதி இழந்து போயிருக்கும் அராபியப் பிராந்தியத்தில் சமாதான மூலம் அமைதி தோன்றுமாயின் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. ஆயினும் இது சாத்தியமாகுமோ என்பதே கேள்வி. ஏனெனின் இந்த மட்ரிட் மாநாட்டில் நிகழ்ந்ததெல்லாம் வெறும் நாடகம் தான் என்று பத்திரிகைகளே உண்மையை ஒப்புக் கொள்ளுமளவிற்கு உருப்படியாய் ஒன்றையும் சாதிக்க முடியாமற் போய் விட்டது இந்த மாநாடு.

இஸ்ரேலிய அராபிய பகைமைகளுக்கு மூலகர்த்தாவாக இருப்பதே அமெரிக்கா தான். மத்திய கிழக்கில் தன் செல்லப் பிள்ளையாக இராணுவ அரசியல் ரீதியில் உதவிகளை கொட்டிக் கொடுத்து இஸ்ரேலை வளர்த்து விட்டது. இஸ்ரேல்

www.tamilarangam.net



என்ற ஒரு நாட்டை அமெரிக்கா உட்பட மேற்குலகமும் சேர்ந்து பாலஸ்தீனத்தில் உருவாக்கியது அராபியப் பிராந்தியத்தில் தமது மேலாதிக்கத்தை செலுத்துவதற்காகவே. இது வரலாற்று உண்மையும் கூட.

"அமெரிக்காவோ பிரித்தானியாவோ யூதர்களுக்கு ஒரு நாடு தேவை என்று உணர்ந்தால் அவர்கள் தமது நாடுகளில் ஒரு யூததேசத்தை உருவாக்கி கொடுக்கட்டும்" என்று மகாத்மா காந்தி கூட ஒரு முறை சொன்னாராம்.

இப்படி வரலாற்று ரீதியில் நீண்ட காலத் திட்டத்துடன் செயற்பட்டு வந்த அமெரிக்காவே மத்திய கிழக்கில் சமாதானத்தை தோற்றுவிக்கப் போவதாக முதுகெலும்பு முறிந்த சோவியத் கூட்டமைப்பின் தலைவரையும் இணைத்துக் கொண்டு ஆடிய நாடகம் தான் இந்த மட்ரிட் மாநாடு. உண்மையில் இப்படி ஒரு மாநாட்டின் தேவையை ஏற்படுத்திக் கொடுத்ததே சதாம் ஹசைன் தான்.

குவைத்தை ஆக்கிரமித்த சதாம் ஹசைன் « இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீன பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் அப்போது தான் ஈராக் குவைத்தை விட்டு வெளியேறும் » என்று தன் நிபந்தனைகளில் ஒன்றைச் சேர்த்துக்கொண்டார்.

« முதலில் நீ குவைத்தை விட்டு வெளியேறு! பிற்பாடு நான் அதற்கு ஒரு தீர்வு

www.tamilarangam.net



காண்கிறேன் » என்ற புஷ்சின் கூற்றுதான் இந்த மட்ரிட் மாநாட்டின் தோற்றத்திற்கு காரணமாகும். 67 ம் ஆண்டு ஐ.நா வின் தீர்மானத்துக்கமைய இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனமண்ணிலிருந்தும் ஏனைய அராபிய நாடுகளின் எல்லைப் பிரதேசங்களிலும் இருந்தும் வெளியேற வைப்பதுமே இந்த சமாதான மாநாட்டின் நோக்கம். மாநாட்டில் கலந்து கொள்ள முன்பே « இந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு ரோஜா தோட்டம் அல்ல ! இஸ்ரேல் ஒரு சிறிய நாடு இங்கே இனி இரண்டு இராஜ்ஜியங்கள் பற்றி கதைக்கவே இடமில்லை » என்று குறிப்பிட்டார் இஸ்ரேலிய பிரதமர் சாமீர்.

இந்த மாநாட்டை ஏற்பாடு செய்ய முன்பே இஸ்ரேல் பல நிபந்தனைகள் போட்டது. பாலஸ்தீன இயக்கம் கலந்து கொள்ளக் கூடாது என்பது முக்கிய நிபந்தனை. பாலஸ்தீன இயக்கம் வளைகுடா போரின் போது ஈராக்கின் பக்கம் சார்பு நிலை எடுத்ததே மேற்படி இஸ்ரேலின் நிபந்தனைக்கான காரணம். ஆயினும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அராபிய தலைவர்களுடன் 8 முறை நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவே P.L.O வும் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தது. ஆனாலும் ஈராக் மாநாட்டில் பங்கு பற்றும் உரிமை மறுக்கப்பட்டது.

மாநாட்டில் கலந்து கொண்ட P.L.O வின் பிரதிநிதிகளில் ஹனான் அஸ்ரவி என்ற ஆங்கில

www.tamilarangam.net



இலக்கிய பேராசிரியையும் ஹைடர் அப்துல் என்ப வரும் 20 இலட்சம் பாலஸ்தீன மக்களின் குரலாய் மாநாட்டில் பலமாக ஒலித்தார்கள்.

« இந்தப் பாடம் எமது தந்தை மண்ணிற்காக. ஆனால் இங்கே என்ன விளையாட்டு நடக்கிறது? பாலஸ்தீன மக்களைப் பற்றியா, நாளும் இஸ்ரேலிய இராணுவத்தால் சிதறிக் கொண்டிருக்கிம் எமது வீடுகள் பற்றியா, இடிபாடுகள் நிறைந்த எமது கிராமங்கள் நகரங்கள் பற்றியா, எம் மீற்றங்களில் வளர முன்பே கருகிப் போகும் ஒலிவ் செடிகள் பற்றியா நாம் இங்கே சிந்திக்கிறோம்! நாம் இவைகள் பற்றி இங்கே பேசாமல் வேறு என்ன பேச இருக்கிறது » என்று மாநாட்டில் உணர்வு பூர்வமாய் பேசினார் ஹைடர் அப்துல்.

« யூதர்கள் வேறு யாருமல்ல, எங்கள் உடன் பிறவா சகோதரர்கள், நாம் எல்லோரும்-
- ஏப்ரகாமின் குழந்தைகள் நாம் இஸ்ரேலியர்களுடன் சமாதானமாக வாழ வேண்டாமா? ஒன்றாக வீடுகளில் சேர்ந்து சாப்பிடக் கூடாதா?» என்று பாலஸ்தீன பிரதிநிதியை நோக்கி கேட்டார் ஜோர்தானிய வெளியுறவு அமைச்சர்.

« நாம் யூதர்களுடன் சாப்பிட விரும்புகிறோம் ஆனால் உடன் மீன் .... » என்று பதிலளித்தார் பாலஸ்தீன பிரதிநிதி ஹைடர் அப்துல். அதாவது போலியான தீர்வுகள் எதுவும் வேண்டாம். எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு

www.tamilarangam.net



தீர்வே வேண்டும் என்றார்கள் பாலஸ்தீன பிரதிநிதிகள். சிரியாவும் மாநாட்டில் P.L.O பிரதிநிதிகளின் பக்கமாகவே நின்றது.

மாநாட்டில் கலந்து கொண்ட இஸ்ரேலிய பிரதமர் இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்றும் வரலாற்று ரீதியில் ஆதாரங்களை அடுக்கியும் சதாமின் ஸ்கட் ஏவுகணை தாக்குதல் வரை உதாரணப்படுத்தியும் அழுத்தமாய் நிறையப் பேசினார்.

« யூபிரடீஸ் தொடக்கம் நைல் நதி வரை அகண்ட மகா இஸ்ரேல் ஒன்றை அமைக்கும் நோக்கத்திலேயே இஸ்ரேல் இம் மாநாட்டில் கலந்து கொள்கிறது. எனவே இதனை மேலும் பல யுத்தங்களுக்கு கதவு திறக்கப்பட்டுள்ளது. » என்றார் சிரிய வெளியுறவு அமைச்சர்.

இஸ்ரேலைப் பொறுத்தவரை பாலஸ்தீனர்களுக்கு ஒரு சுய இராஜ்ஜியம் என்பது பற்றி கதைக்கவே தயாரில்லை. சுயாட்சி வடிவில் ஏதாவது ஒரு திட்டத்தை கொடுக்கலாம் என்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். ஆனாலும் இஸ்ரேல் தான் ஆக்கிரமித்து வைத்துள்ள கிழக்கு ஜெருசலத்தை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று ஏற்கனவே அறிவித்துள்ளது. 47ம் ஆண்டு பாலஸ்தீனத்தை இரண்டு மாநிலங்களாய் ஐ.நா பிளந்தது. ஜெருசலத்தை சர்வதேச நகராகக் கொண்டு கிழக்கு ஜெருசலம் பாலஸ்தீனர்களுக்கும் மேற்கு ஜெருசலம் யூதர்களுக்கும்

www.tamilarangam.net



என்றும் ஐ.நா தீர்மானம் நிறைவேற்றியது.

இப்போதுள்ள பிரச்சனை; இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக்கரை காசா உட்பட கிழக்கு ஜெருசலத்தையும் விட்டுக் கொடுக்க மறுப்பதே. அமெரிக்காவும் ஜெருசலத்தை மனிதாபிமான அடிப்படையில் நோக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கு ஒத்துப்பாடுகிறது. இவை தவிர, இப்போதும் இஸ்ரேல் தான் ஆக்கிரமிக்கும் பாலஸ்தீனப் பகுதிகளில் பயங்கரமான குடியேற்ற நடவடிக்கைகளைச் செய்கிறது. 13 வருடங்களுக்கு முன்பு மேற்குக்கரையிலும் காசாவிலும் ஒரு சில ஆயிரமாக இருந்த யூதர்களின் என்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்துக்கும் அதிகமாகி விட்டது.

சோவியத்யூனியனிலிருந்து மட்டும் 92ம் ஆண்டுக்குள் 10 இலட்சம் யூதர்கள் இஸ்ரேலில் வந்து குடியேறுவார்கள் என்று இஸ்ரேலிய அரசே சொல்கிறது. குடியேறுபவர்களுக்கு விசேட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன.

அரபிய நாடுகளைப் பொறுத்த வரை கிழக்கு ஜெருசலம் உட்பட இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை விடுவிப்பதும் யூதக் குடியேற்றங்களை அடியோடு நிறுத்தும் செய்வதுமே பாலஸ்தீன பிரச்சனையின் தீர்வுக்கான முக்கிய புள்ளிகளாக கருதுகின்றனர்.

அராபிய பிராந்தியத்தில் அணு ஆயுத உற்பத்தியில் வலிமை பெற்று அராபிய நாடுகளுக்கு மட்டுமின்றி இன்று உலகுக்கே அச்சுறுத்தலாக

www.tamilarangam.net



உருவெடுத்திருக்கிறது இஸ்ரேல். இத்தகைய இஸ்ரேலோடு அராபியத் தலைமைகள் தமக்குள் ஐக்கியமின்றி பேச முன்வந்திருப்பதே மட்ரிட் மாநாட்டின் பலவீனத்தை வெளிப்படுத்தும்.

ஒருபுறம் இஸ்ரேலுக்கு இன்னமும் விசேட இராணுவ பொருளாதார உதவிகளை கொட்டிக் கொடுக்கும் அமெரிக்கா மறுபுறம் எகிப்து ஜோர்தான் போன்ற அராபிய நாடுகளுக்கும் சில இராணுவ தளபாடங்களையும் பொருளாதார உதவிகளையும் வழங்கிக் கொண்டும் நிலையிலும் இருபக்கமும் ஒரு நேர்மையான நாயகனாய் நடிக்க முயலும் ஒரு நாடகம் தான் இந்த மத்திய கிழக்கு சமாதான மாநாடு.

இத்தகைய நிலைமைகளுக்குள்; இஸ்ரேலுக்கும் அராபியர்களுக்கும் இடையில் எதுவித உடன்பாடுகளும் காணப்படாமல் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை அமெரிக்காவை மையப்படுத்தி முடிந்து போனது மட்ரிட் மாநாடு.

• சி. அமுதன்.


********************

38ம் பக்கத்தொடர்.

அழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. இந் நிலையில் இந்த அழிவுப் பாதையில் இருந்து தமிழ்மக்களை எப்படி மீட்டு எடுப்பதென்பதே பிரதான கேள்வி. அதைவிட்டு வேறு மார்க்கம் பற்றி சிந்திக்காது ஏதாவது செய்யவேண்டும்; சொல்லவேண்டும் என்பதற்காக இம்மாதிரியான தாக்குதல்களை சரி, பிழை என ஆய்வுசெய்வது பொழுதுபோக்குக்கே ஏற்றதாக இருக்கும், ஓய்வுநேரத்தைக் கழிக்க!

www.tamilarangam.net





14

# திரும்பும் பொழுது

● அருள்

பாடசாலை மீண்டும் உயிர் பெற்றிருந்தது. பாடசாலைக்கே உரித்தான அந்த இரைச்சல் அதை நிரூபித்தது. குட்டியின் வகுப்பறையை ஆரவாரம் நிறைத்திருந்தது. விடுமுறையின் பின் முதல்நாள். எல்லோர் முகத்திலும் புதுப்பொலிவு தென்பட்டது. அவர்கள் தத்தமது நெருங்கிய நண்பர்களுடன் எதையாவது கதைத்து விடுவதில் ஆர்வமாக இருந்தார்கள். பின்னர் அவர்களது உரையாடல் பொதுவான விடயங்களுக்குத் திரும்பியது. கால்பந்து, கிரிக்கெட் தொடங்கி விடியோப் படங்கள் ஊடாக இயக்க மோதல் இராணுவத்துடன் மோதல் வரையிலாக சொல்வதற்கு அவர்களிடம் நிறைய இருந்தன. ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த செய்தியை சொல்வதில் முனைப்பாக நின்றார்கள். அவர்கள் செய்திகளை மிகைப்படுத்தியும்.

தாங்கள் விரும்பியவாறும், அவர்களிற் சிலர் கூடவே அபிநயத்துடனும் சொல்லிக் கொண்டார்கள். இயக்க, இராணுவ மோதல்களைப்பற்றிக் கதைத்த போது பத்திரிகைகளில் வாசித்த அல்லது மற்றவர்கள் சொல்லக் கேட்ட விடயங்களை சொன்ன போதும் நேரே நின்று பார்த்தது போல் விபரித்தார்கள். அவ்வகுப்பறையில் சில மாணவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதுவுமே பேசாமல் அமைதியாக நின்றார்கள். அவர்களில் ஒரு சிலர் வகுப்பறைக்கு வெளியே போவோர், வருவோரை வேடிக்கை பார்த்தவண்ணமிருந்தனர். குட்டி எதுவுமே கதைக்காத போதிலும் அவர்கள் பேசுவதை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டு நின்றான். அண்மையில் நடந்த ஒரு தாக்குதல் சம்பவம்பற்றி கூறப்பட்ட போது குட்டியின் முகத்தில் ஆச்சரியமும் வியப்பும் மின்னி மறைந்தன. அவன் முன்னரே கேள்விப்பட்ட செய்தியானாலும் இவ்வளவு தெளிவாக கோர்வையாக அவனுக்கு யாருமே விபரித்ததில்லை. மிகக் கச்சிதமாக சாமர்த்தியமாக அச்செயலை செய்து முடித்தவர்களை குட்டி மனதிற்குள் மெச்சினான். குட்டிக்கு ரகுவரனை சந்தித்த ஞாபகம் வந்தது. அவன் வேறு யாரும் சந்தித்திருப்பதாகக் காணோம். அவனைப் பற்றி யாருமே கதைக்கவில்லை. ரகுவரனைப் பற்றிச் சொல்லலாம் என்றால் மற்றவர்கள் அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதாக இல்லை. சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக இருந்தாலும் மற்றவர்களது உயர்ந்த குரல்களும் அவர்கள் தாம் சொல்லும் விஷயத்தில் முனைப்பாக நின்றமையும் குட்டியின் ஆர்வத்தை அடக்கிப் போட்டன. பின்பு சொல்லலாம் என மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

நிறையக் கதைத்து அலுத்துப் போன ஒரு மாணவன் இப்போது அவர்களிடமிருந்து விலகிச் சென்று கரும்பலகையில் ஏ.கே. ரக துப்பாக்கி ஒன்றை வரைவதில் மிகுந்த பிரயாசையுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அவன் தனது ஓவியத்தை முடிக்கும் தறுவாயில் அவனருகில் சென்ற இன்னொரு மாணவன் அவ் ஓவியத்திலுள்ள தவறுகளை விமர்சித்தான்.

"நீ ஒரு நாளும் ஏ.கே.யை சரியாப் பார்க்கேல்ல போல"

www.tamilarangam.net



கீறியது பிழையென்று சொன்
-னாலும் பரவாயில்லை ஏ.கே.யை
சரியாப் பார்க்கேல்ல என்று
சொன்னது கீறியவனுக்கு
அவமானமாகப்பட்டது.
அவன் சீறினான்.
"கணக்க அளக்காத நான் எத்
-தனை நாள் அதை என்ர கையில
எடுத்துப் பார்த்திருக்கிறன்.
நீதான் சரியாப் பார்க்கேல்ல
என்டு சொல்லு ------ சில
-வேளை நீ பின்னால அலையிற
வையட்டை ஏ.கே. இல்லை
-யாக்கும் ----" அவர்கள் வாக்
-குவாதப்பட ஒருவன் கத்தி
-னான்.
"டேய் சேர் வாறார்"
கீறிய விவாதப் பொருளை
அவசரமாக அழித்து விட்டு
இருவரும் பாய்ந்து வந்து
வாங்கிலில் அமர்ந்து கொ
-ண்டார்கள்.
துவக்கின் கீறல் ஆசிரியரின்
கண்களில் தென்பட்டிருந்த
போதிலும் அதைப் பற்றி
விசாரிப்பதில் அவர் சுவார
-ஸ்சியம் காட்டவில்லை.

ஆனால் குட்டி மனதிற்குள்
நினைத்துக் கொண்டான்.
"ஏ.கே. வைச்சிருக்கிறவை
-யோடதான் போய்ச் சேர
வேணும்"
பரபரப்பு அடங்கி தனக்கு
முன்னால் அமைதியாக தன்னை
-யே பார்த்துக் கொண்டிருக்கும்
மாணவர்களை ஆசிரியர் நிதா
-னமாக நோட்டமிட்டார்.
அம்மாணவர்கள் பாதித்துள்ள
விசயங்கள் தன் எண்ணத்தில்
சிந்தனையில் அழலவிட்ட அவரது
முகம் வாடியது. தனக்கு முன்
-னால் இருக்கும் அம் மாணவர்
-களது எதிர்பார்ப்புகளைப்பற்றி
அவரால் புரிந்து கொள்ள
முடியவில்லை. அவர்களது எதி
-ர்காலத்தைப்பற்றிய நினைப்பு
அவருக்கு மன உளைச்சலைக்
கொடுத்தது. நிலத்தை நோக்
-கிய வண்ணம் ஒரு பெருமூச்
-சை விட்டுக் கொண்டவர்
கரும்பலகையில் இன்னும்
மங்கலாகத் தெரிந்து கொண்
-டிருந்த ஓவியத்தை அழுத்தி
அழித்துவிட்டு அக்கவனைக்

www.tamilarangam.net



-கான பாடத்திட்டத்தின் முதற்படியை தொடங்கினார் ஆசிரியர் என்ன சொல்கிறார் என்பது குட்டிக்கு புரியவில்லை. அவ்வது புரிந்து கொள்ள விரும்பவில்லை. ஆசிரியரின் முகத்தை அவன் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவருடைய வார்த்தைகள் அர்த்தங்களை இழந்து வெறுப்பூட்டும் சகிக்க முடியாத ஒலிவடிவங்களாக அவனுடைய காதில் விழுந்து அழிந்தன. குட்டிக்கு அவரிடமிருந்து பார்வையை விலக்க முடியவில்லை. அவன் அதற்கு துணியவும் மாட்டான். யாருக்குமே அதற்கு துணிவில்லை. பாடத்தில் கவனமில்லாமல் வேறெங்காவது கவனத்தை செலுத்திக் கொண்டிருப்பதை அறிந்த கண்டிப்பான ஆசிரியர் அவதானித்தார் என்றால் அதன் விளைவைப் பற்றி அனேகமாக அவ்வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் சொந்த அனுபவமாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.

குட்டிக்கு சோர்வாக இருந்தது. மணி அடிப்பதாகவும் காணோம். அவஸ்தைக்குள்ளானவன் போல் ஒரு முறை நெளிந்து இருந்தான். ஆசிரியர் இப்போது கரும்பலகையில் எழுதிக் கொண்டு இருந்தார். வெண்கட்டியை இரண்டாக முறித்து, ஒரு பாதியைக் கொண்டு அவர் எழுதும் லாவகத்தை குட்டி பெரும்பாலும் ரசிப்பதுண்டு. அவரால் மட்டுமே அவ்வாறு எழுத முடியும். இன்றும் அவ் லாவகம் கண்முன்னே தெரிந்தாலும் குட்டியை அது பாதித்ததாக இல்லை.

மற்ற மாணவர்கள் ஆசிரியர் எழுதுவதை பிரதிபண்ணிக் கொண்டிருப்பதை குட்டி இப்போது தான் கவனித்தான். மெல்லிய திகைப்புடன் கொப்பியை விரித்து ஏதோ கிறுக்கினான். அவனை யாரோ பலவந்தப்படுத்துவது போல் உணர்ந்தான். இதை விட கஷ்டப்பா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-டற்ற சுதந்திரமான வாழ்க்கை எங்கோ நின்று தன்னை கையசைத்து அழைப்பது போல் உணர்ந்தான். அது அவனை பரவசப்படுத்தும் போலவும் இருந்தது. இப்போது மனம் உற்சாகம் கொண்டது. நிமிர்ந்து பார்த்தான். ஆசிரியர் தான் எழுதி முடித்து விட்டு மாணவர்கள் எழுதுவதை அவதானித்து நின்றார். கிட்டு அவரை பார்த்து, பின்பு அவரிடமிருந்து பார்வையை விலக்கி கரும்பலகையில் எதையோ தேடி, மீண்டும் குனிந்து எழுதுவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான். ஒருவாறு ஆசிரியர் அன்றைய பாடத்தை நிறைவு செய்து கொண்டு வெளியேறினார்.

கிட்டுக்கு சுதந்திரம் கிடைத்த மாதிரி இருந்தது. ஆனால் அந்த சுதந்திரம் கொஞ்ச நேரமே நீடித்தது. அடுத்த பாடத்திற்கான ஆசிரியர் வெளியில் வந்து கொண்டிருந்தார், கிட்டு மீண்டும் சோர்வடைந்தான். ஏதோ முணுமுணுக்கவும் செய்தான். அன்றைய தினம் கிட்டுக்கு ஒரு சோதனை நாளாகவே அமைந்தது. வெறுப்பும் அலுப்புமாக அன்றைய பாடசாலை பொழுது கழிந்தது.

அவனைப் பொறுத்தவரை இன்று பாடசாலையின் கடைசி நாள். வழமையான நேரத்திற்கே இன்றும் பாடசாலைக்கு வந்தான் நண்பர்களின் கிண்டல், கேலி எல்லாவற்றிலும் கலந்து கொண்டான். நீண்ட நாள் உறவு ஒன்று அறுந்து விட்ட போலதை அவன் உணரவே செய்தான். துயரமாகத்தான் இருந்தது. ஆனால் அத்துயர உணர்ச்சி நீடிக்கவில்லை. ஆசிரியர்களின் வருகை, சக மாணவர்களின் சம்பாசனை அவனைத் திசை திருப்பின. இனி தன்னை எந்த ஆசிரியரும் கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ முடியாது என்ற நினைவு வந்தது மெதுவாக தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடைக்கிடை "இவர்கள் எல்லோரும் ஒரு நாள் என்னைப் பற்றி வியந்து கதைப்பார்கள், என்னைக் காணும் வேளைகளில் பிரமிப்புடன் பார்ப்பார்கள்" என்ற எண்ணம் நெஞ்சில் வழிந்தது.

யாருக்குமே சொல்லாமல் அவன் போகப் போகும் பயணம் நெஞ்சில் ஒரு திகில் இருந்தாலும் ஆர்வமும் அவன் அடையப் போவதாக எண்ணி இருந்த நிலையில் உள்ள ஆசையும் திகில் மேவி நின்றன. நெஞ்சப் பரபரப்பை அடக்கி வைத்துத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டியிருந்தது.

கடந்த சில நாட்களாக இரகசியமாக அவன் தனது இலட்சியப் பயணத்திற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டான். அவனது "இலட்சிய"த்திற்கு இருக்கை எந்த தடையும் இருக்கவில்லை. அகன்ற பாதைகள் அவன் வரவிற்காய் காத்திருந்தன. கடைசியாக நாளும் குறிக்கப்பட்டது.

யாருக்குமே சொல்லக்கூடாது என்று அழுத்தமாகச் சொல்லப்பட்டது. சொல்லப்பட்ட நேரத்தில் குறித்த இடத்திற்கு வந்து சேருமாறு கேட்கப்பட்டான். தனது எண்ணம் இவ்வளவு விரைவாக நிறைவேறியதில் கட்டுக்கு அளவு கடந்த சந்தோசம்.

இரவில் பலவிதமான கனவுகள். தனிமையில் விழித்திருக்கும் போது சாகசக் கற்பனைகள். தாயாரை நினைத்த போது, அவளை விட்டுப் பிரியப்போகிறோம் என்ற எண்ணம் உதைத்த போது கொஞ்சம் தடுமாறித்தான் போய்விட்டான். ஆனால் "பிறகு வந்து பார்க்கலாம் தானே" என்று தனக்குள் சமாதானம் செய்து கொண்டான்.

இன்று பாடசாலைக்கு புறப்பட்டு வரும்போது படலையில் நின்று தாயாரை உற்றுப்பார்த்து விட்டே திரும்பினான். அவனில் ஏற்பட்ட மாற்றங்களை அத்தாயினால் கண்டு கொள்ள முடியவில்லை. அவனது குடி

www.tamilarangam.net



அப்படி ஏதும் செய்வான் என்பது அவனது கற்பனைக்கே எட்டாத ஒன்று. புதிய தவணை தொடங்கிய நாளிலிருந்து அவனைப் பாடாய்ப்படுத்திய பாடசாலைக்கு அவன் இன்று விடை கொடுக்கப் போகிறான். இந்த சில தினங்களில் வகுப்பறையில் அவன் பட்ட கஸ்ரங்கள் அவஸ்தைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வருகின்றன. ஒவ்வொரு பாட ஆசிரியரும் வந்து போகும்போது கிட்டி மனதிற்குள் அவர்களுக்கு விடை கூறிக் கொண்டிருந்தான். அவ் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட சில சம்பவங்கள் அவன் நெஞ்சில் வந்து சென்றன. அவனுக்கு சாதகமான பாதகமான பல சம்பவங்கள். ஆனால் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளும் நிலையில் அவன் இல்லை.

இறுதிப்பாடம் முடியும் தறுவாயில் இருந்தது. அந்த வகுப்பறையில் அவனுடைய பாடசாலை வாழ்வின் கடைசி நிமிடங்கள். கவலையாக இருந்தது. நெஞ்சு பாரமானது. மெதுவாகத் திரும்பி நண்பர்கள் எல்லோரையும் பார்த்தான். கண்களில் நீர் பனித்தது. கண்ணீர் சிந்தி விடாமல் தடுக்கும் முயற்சியில் வெற்றி பெற்றான்.

சொல்லப்பட்ட நேரம் குறித்த இடம் அழுத்தமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் மீண்டும் அவன் காதுகளில் எதிரொலித்தது. "நான் ஒரு வீரனாகப் போகிறேன்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். இறுதி நேரத்தில் வந்த கவலையும் அகன்றது. ஆசிரியரை நோக்கி நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

பாடசாலை முடிய வழமை போல மைதானத்தில் காற்பந்து விளையாடினார்கள். ஆரவாரத்தோடும், மகிழ்ச்சியோடும் சத்தம் போட்ட வண்ணமுமாக அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனாக தனது கனவுகளைச் சுமந்த வண்ணம் கிட்டியும் பந்தைத் துரத்திக் கொண்டிருந்தான். நேரம் கரைந்து மாலைப் பொழுதுக்குள் நகர்ந்தது.

(தொடரும்)

# அகதி வாழ்வை சூழும் கருமேகங்கள்

• ம. நரேந்திரன்



கடந்த சில மாதங்களாக யேர்மனியில் வெளிநாட்டவர் மீதும் அகதிகள் மீதும் 'புதிய நாஜிகள்' வன்முறையை கட்டவிழ்த்துள்ளனர். இவ் வன்முறைக்கு பொலிசாரின் ஒத்துழைப்பு இருப்பது அம்பலமாகியுள்ளது. இவ்வாறு இனவாதிகளின் வன்முறைக்கு பொலிசார் பாதுகாப்பு கொடுப்பது இதுவல்ல முதன்முறை. சுவிஸின் ZUG என்ற இடத்தில் ஓர் தமிழர் தாக்கப்பட்டதின்போது பொலிசாரின் ஒத்துழைப்புப் பற்றி சுவிஸ் பத்திரிகைகள் அம்பலமாக்கியிருந்தன. அமெரிக்காவில் MISSIPI மாநிலத்தில் கறுப்பினத்தவர்களின் வதிவிடங்கள் தீமூட்டி எரிக்கப்பட்ட சம்பவங்களே இதற்குச் சான்று. இன்று இது MISSISIPI BURNING என திரைப்படமாகவே வெளிவந்துள்ளது.

இவ் வன்முறைகள் அதிகரிப்பதும் ஓய்வதும் இயல்பாக நடைபெறுவதில்லை. அரசுகள் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்கும் பட்சத்தில் இவற்றிற்கு வெளிநாட்டவரே காரணம் என கவனத்தை திசைதிருப்பிவிடுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

www.tamilarangam.net



மேற்கு யேர்மன், கிழக்கு யேர்மன் இணைவுக்குப் பின்னர் அதிகரித்துள்ள வேலையில்லாத் திண்டாட்டம், விலையேற்றம் ஆகியன மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளன. அண்மையில் கிழக்கு யேர்மன் இளவர் ஒருவருக்கும், மேற்கு யேர்மனில் பிறந்து வளர்ந்த (துருக்கி இன) இளைஞன் ஒருவருக்கும் இடையில் நடந்த 'தொலைக்காட்சி விவாதத்தில்' “எமது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணம் உங்களைப் போன்ற வெளிநாட்டவர்தான்” என ஆக்ரோசமாக முழங்கினார். இதற்கு அவ் இளைஞன் “நான் இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவன். நீ இப்போ வந்துவிட்டு என்னைப் பற்றி கதைப்பதற்கு அருகதை இல்லை” என பதிலடி கொடுத்தான்.



Einig Vaterland

சுவிஸிலும் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. மேலும் ஓய்வூதியம் பெறும் வயோதிபர்கள் கூடுதலான வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவர்களிற்கு வழங்கப்படும் ஓய்வூதியப் பணம் பெறுமதி மாற்றமின்றி வழங்கப்படுகிறது. பத்து வருடத்திற்கு முன்னதாக பெறும் சம்பளத்தில் இன்று வாழ்க்கை நடத்துவது முடியாத விடயமே. வதிவிட வாடகை கடந்த இரண்டு வருடத்தில் இன்று 25% அதிகரித்துள்ளது. ஆனால் சம்பளம் 10% மட்டுமே அதிகரித்துள்ளது. சுகாதார காப்புறுதி இன்றுள்ளதைவிட 1977 இல் 40% குறைவாகவே இருந்துள்ளது.

இவ் ஆண்டு நடந்த தேசியப் பிரதிநிதி தேர்தலில் AUTOPARTEI (கார் கட்சி), SCHWEIZER DEMOKRATEN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


(சுவிற்சர்லாந்து ஜனநாயகவாதிகள்), SVP (சுவிஸ் மக்கள் கட்சி) வெளிநாட்டவர்க்கு எதிரான பிரச்சாரங்களை அப்பட்டமாகவே செய்தன. "அகதிகள் வருகையை நிறுத்து!" போன்ற கோசங்களை முன்வைத்து இவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளனர். இதேநேரம் GRÜNE BUNDNIS (பசுமை கூட்டு முன்னணி) "தமிழர்கள் எமது நண்பர்கள்" என்ற கோசத்தினை (வாக்குகளை மட்டும் எதிர்பார்க்காது) வெளிப்படையாக வைத்தனர். இக் கோசம் இவர்களது எல்லா தேர்தல் விளம்பரப் பலகைகளிலும் எழுதப்பட்டிருந்தது.

இன்று ஐரோப்பிய சமூக (EC) பொருளாதார ஒருங்கிணைப்புக்கு முன்னணியில் நிற்கும் யேர்மன் இவ்வாறு இனவாதத்தை ஊக்குவிப்பது மீண்டும் 'நாசிச யேர்மனி'யாக வழிகோலும் என சந்தேகிக்கப் படுகிறது. இப் பொருளாதார சமூகத்தில் தனி ஐரோப்பியருக்கே அனைத்து சலுகைகளும் இருக்கும். மூன்றாம் உலக நாட்டவர் இவ் ஐரோப்பிய நாடுகட்கு வருவதாயின் தகுந்த காரணம் காட்டியே விசாவை பெறமுடியும். வேலையாட்களைப் பொறுத்தவரை, ஐரோப்பிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் நாட்டவருக்கே முக்கியத்துவம் வழங்கப்படும். இந் நடவடிக்கை ஐரோப்பிய வெறியைத் தூண்டுவதற்கு வழிகோலும் என எதிர்பார்க்கலாம்.

இம் மேற்குலக நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தியும், குறைந்த விலையில் மூலப்பொருட்களை கொள்வனவு செய்தும் பெரும் லாபம் சம்பாதிக்கின்றன. வசதியான வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றன. மேற்குலக நாடுகளிலுள்ள மூன்றாம் உலக நாட்டு தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களது உழைப்பும் சுரண்டப்படுவது மட்டுமல்லாமல், நாசிச அபாயத்தையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர்.

www.tamilarangam.net



# இலங்கையில் பணவீக்கம்

பணவீக்கம் எனும் போது ஒரு நாட்டின் பொது விலை மட்டங்கள் ஒரு குறித்த காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் குறிக்கும். விலை மட்டங்களில் ஏற்படும் பாரிய அதிகரிப்பும், அவற்றின் தொடர்ச்சியான போக்குமே பணவீக்கமாக கொள்ளப்படும். சராசரி விலைமட்டங்களில் ஏற்படும் அதிகரிப்பினூடாக பணவீக்கம் வெளிப்படுகின்றது. சில வேளைகளில் அரசுகள் விலையை ஸ்திரமாக வைத்திருக்கும் நோக்குடன் விலை மட்டங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையிலும் அந்த அதிகரிப்பை மக்களின் கண்களுக்கு தெரியவிடாமல் விலைக்கட்டுப்பாட்டின் மூலம் கட்டுப்படுத்த முடியும். இது அமுக்கப்பட்ட பணவீக்கமாக கருதப்படும். பணவீக்க நிலையில் பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரிக்கும் போது பணத்தின் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடைவதனை அவதானிக்கலாம். [உ+ம்] கடந்தமாதம் ஒரு பொருளின் விலை 2000/= ரூபாவுக்கு வாங்கப்பட்டது அதே பொருள் இம்மாதம் 3000/= ரூபாவாக அதிகரிக்குமானால் பணத்தின் கொள்வனவு சக்தி ஒரு மடங்கு குறைந்திருக்கின்றதென்பதே தெளிவாகின்றது.

விலை மட்டங்களில் ஏற்படும் சிறிய அதிகரிப்பு (ஒரு வீதம் தொடக்கம் ஐந்து வீதம் வரை) ஊரும் பணவீக்கமாகவும், விலைமட்ட அதிகரிப்பு 8% தொடக்கம் 10% வரை இருந்தால் நடக்கும் பணவீக்கமாகவும், கணிசமான விலை மட்ட அதிகரிப்பு (20% — 30% வரை) ஏற்படுமாயின் சீறும் பணவீக்கமாகவும் திடீர் திடீரென விலைமட்டங்களில் ஏற்படும் அதிகரிப்பு பாயும் பணவீக்கமாகவும் கருதப்படும். வேகமான யுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலங்களிலேயே இத்தகைய பணவீக்க நிலைமையை (50% மேல்) காணலாம்.

பணவீக்கமானது பொது விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது பொது விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை விலைச் சுட்டெண் அளவிடுகின்றது. எனவே விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு குறித்த காலப்பகுதியில் பணவீக்கத்தை அளவிட முடியும். இலங்கையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலமும், மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி மூலமும் பணவீக்கத்தை கணிக்கின்றனர். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாக வைத்து கணிப்பிட்டதன் மூலம் 1985ம் ஆண்டு காணப்பட்ட பணவீக்க நிலை 7.98% ஆக இருந்தது. இது 1987ல் 7.72% ஆகவும் 1988ல் 13.98% ஆகவும் 1989ல் 11.57% ஆகவும் 1990ல் நவம்பருக்கு முன்னர் 21% ஆகவும் டிசம்பரில் 14% ஆகவும் இருந்தது. விலைச் சுட்டெண் அடிப்படையில் கணிக்கப்படும் பணவீக்கத்தின் சரியான அளவீடானது முற்று முழுதாக விலைச் சுட்டெண் கணிப்பீட்டின் சரியான தன்மையை பொறுத்ததாகும். ஒரு நாட்டின் பணவீக்கத்தை அந்நாட்டு மொத்த நாணய வெளியீட்டை அவதானிப்பதன் மூலமும் அறிந்து கொள்ளலாம். அதாவது 1981ல் 15% மாக இருந்த ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபாய் பெறுமதியான நோட்டுகளின் பங்கானது (அச்சடிக்கும் பணத்தின் அளவு) படிப்படியாக அதிகரித்து 1989ல் 68.5% ஆகவும் 1990ல் 73.2% ஆகவும் உயர்வடைந்துள்ளமை உயர்ந்து செல்லும் பணவீக்கத்திற்கு எடுத்துக்காட்டாகும். மறுபுறத்தில் பணவீக்க நிலையில் சிறு பெறுமதி நாணயங்களின் பயன்பாடானது குறைவடைந்து செல்வதனையும் அவதானிக்க முடியும்.

பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக கேள்வி

www.tamilarangam.net



தாண்டல் வீக்கம், செலவு தாண்டல் வீக்கம் ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன. கேள்வி தாண்டல் வீக்கமெனும் போது பண வழங்கல் அதிகரித்த நிலையில் பொருட்கள் சேவைகள் அதிகரிக்காத நிலையில் பொது விலைமட்டங்கள் அதிகரித்து செல்லும் நிலையாகும். பொருளிற்கான உற்பத்தி மட்டம் மாறா நிலையில் கேள்வி அதிகரிக்குமாயின் சந்தை விலை உயர்வடையும் நிலையே கேள்வி தாண்டல் வீக்கமாகும். சுருங்கக் கூறின் அதிகளவு பணம் குறைந்தளவு பண்டங்களை துரத்திச் செல்லும் நிலையாகும். பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்பட மேலதிக கேள்வி மட்டுமன்றி செலவும் ஓர் காரணியாகும். அதாவது ஊதிய அதிகரிப்பை தொடர்ந்து உற்பத்தி செலவு அதிகரிப்பதூடாக விலை மட்டங்களில் ஏற்படும் உயர்வே செலவு வழி பணவீக்கமாகும். தொழிலாளர் தொழிற்சங்கங்கள் ஊடாக கூலி உயர்வுக்காகப் போராடும் போது கூலி மட்டம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது. இவ்வாறு விலை அதிகரிப்பால் மீண்டும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் குறைவடைய கூலி உயர்வு கேட்டு கோசம் எழுப்பும் போது கூலியை அதிகரிக்க மீண்டும் விலைமட்டம் அதிகரிக்கும். எனவே விலைமட்ட அதிகரிப்பு கூலி அதிகரிப்புக்கும், கூலி அதிகரிப்பு விலைமட்ட அதிகரிப்புக்கும் காரணமாக அமைகின்றது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை காரணம் காட்டி தொடர்சியாக பற்றாக் குறை வரவு செலவு திட்டத்தை தயாரித்து வருகின்றது. இதனை நிதியீட்டம் [நிவர்த்தி] செய்வதற்கு மத்திய வங்கி, வணிக வங்கி போன்ற வங்கித் துறை மூலங்களைப் பயன்படுத்தியதால் பண நிரம்பல் அதிகரிப்பேற்பட்டு கேள்வி வழிப்பண வீக்கம் ஏற்பட காரணமாக அமைகின்றது. மத்திய வங்கியின் புதிய நாணய வெளியீடும் வணிக வங்கிகளின் பணவாக்கமுமே இதற்கான காரணிகளாகும் பத்து ஆண்டுகளில் இலங்கையின் பணநிரம்பல் நான்கு மடங்காக அதிகரித்திருக்கின்றது. பொருட்களின் உற்பத்திச் செலவு

www.tamilarangam.net



அதிகரிப்பு, மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பு, ஊதிய அதிகரிப்பு ஆகியனவும் செலவு வழி பணவீக்கம் ஏற்பட காரணமாகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் தொழிலாளர் மற்றும் சகல உத்தியோகத்தர்களுடைய சம்பளங்கள் பலதடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பொருட்களிற்கான கேள்வி அதிகரித்து விலைமட்டங்கள் அதிகரிக்கின்றது.

1977 க்கு பின் இலங்கையில் தாராளவர்த்தக கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் உலகளாவிய ரீதியில் நிலவிய பணவீக்கம் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்த நிலையில் வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்கள், முடிவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது வெளிநாடுகளில் நிலவிய பணவீக்கம் உள்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இலங்கையில் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட "நாணயம் மிதக்கவிடப்பட்டமையும் (அன்றாட மதிப்பீடு அல்லது நிலையற்ற மதிப்பீடு) பணவீக்கத்திற்கு ஓர் காரணமாகும். இத்திட்டத்தின் கீழ் பிரதான நாட்டு நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதால் இறக்குமதி செலவுகள் அதிகரித்த நிலைமையில் பணவீக்கம் ஏற்பட காரணமாகிறது

விவசாய உற்பத்தித் துறை காலநிலை காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலும் நெல் மற்றும் பணப் பயிர்கள், உப உணவுப் பொருட்கள் கால நிலையால் பாதிக்கப்பட்டதுடன் நாட்டில் நிலவிய அரசியல் சூழ் நிலைகளாலும் உற்பத்திகள் பாதிக்கப்பட்டன. அதாவது வடகிழக்கின் தொடர்ச்சியான யுத்தமும், தெற்கில் நிலவிய வன் செயல்களும் உற்பத்தியில் தேக்க நிலை ஏற்படக் காரணமாகியது. அத்துடன் பாதுகாப்புச் செலவீனமான அதிகரிப்பானது உற்பத்திக்கான தொழிலின் அளவை கணிசமான அளவு பாதித்தது. இந்த ஆண்டு பாதுகாப்பு செலவினங்களுக்காக ஆயிரத்து ஐந்நூறு கோடிக்கு மேல்

www.tamilarangam.net



செலவிடப் படுகின்றது. இத் தொகை மொத்த செலவினத்தில் பதினைந்து வீதமாகும். அடுத்த ஆண்டு (1998) இரண்டாயிரத்து ஐநூறு கோடி ரூபா பாதுகாப்பு செலவினங்களுக்காக ஒதுக்குவதாக அரசு தீர்மானித்துள்ளது. இது இலங்கையின் மொத்த செலவினத்தின் கால் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் உற்பத்தி முதலீடுகள் தேக்கமடைந்து பணவீக்கம் ஏற்படகாரணமாகின்றது.

அரசாங்கமானது வரவு செலவுதிட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மறைமுக வரிகளை பொருட்கள் சேவைகள் மீது விதிப்பதாலும், பணவீக்கம் ஏற்படுகின்றது. அரச செலவினங்கள் அதிகரித்து செல்லும் நிலையில் அவற்றை நிவர்த்தி செய்ய மறைமுகவரிகளை விதிக்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றது. மிக அண்மைக் காலத்தில் வளைகுடா நெருக்கடியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெற்றோலிய விலை உயர்வும் இலங்கையின் பணவீக்கத்திற்கான ஒரு காரணியாகும்.

பணவீக்கத்தினால் ஏற்படும் பொருளாதார விளைவுகளைப் பார்ப்போமானால்; நிலையான வருமானம் பெறுவோரும், தற்காலிக வருமானம் பெறுவோரும் வெகுவாக பாதிக்கப்படுவதுடன் கடன் கொடுத்தோரும் பணத்தின் மெய்ரீதியான பெறுமதிக் குறைவால் பாதிக்கப்படுவர். ஆனால் மறுபுறத்தில் வருமான ஏற்றத்தாழ்வு முதலீட்டை அதிகரிக்கச் செய்யும் என்றும் கருதப்படுகின்றது. நமது நாட்டைப் பொறுத்தவரை வெவ்வேறு வருமானம் பெறும் பிரிவினரை அவர்களது வாழ்க்கைச் செலவு உயர்வு மூலம் வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சியடையச் செய்யும். வர்த்தகர்களைப் பொறுத்தவரை அவர்களிடமுள்ள கையிருப்புகளின் விலைகள் திடீர் திடீரென அதிகரிப்பதனால் அவர்கட்கு சாதகமாக அமைகின்றன. சேமிப்பாளர்களைப் பொறுத்தமட்டில் பணவீக்க அளவுக்கு ஏற்ப வட்டி வீதமும் உயர்வடையாத காரணத்தால் சேமிப்பின் உண்மைப் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்லும். இலங்கையில் உணவு முத்திரை வைத்திருப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போரைப் பொறுத்தமட்டில் அது நிலையானபணப் பெறுமதியை கொண்டால் கொள்வனவு செய்யக் கூடிய பொருட்கள், சேவைகளின் அளவு குறைவடையும். ஓய்வூதியம் பெறுவோரும் பெருமளவு நிலையான வருமானம் பெறுவதனால் இவர்களது மெய்வருமானமும் குறைவடையும்.

பண வீக்க நிலையில் ஏற்றுமதிப் பொருட்களில் வருமானக் குறைவும், இறக்குமதிச் செலவுகளில் அதிகரிப்பும் ஏற்பட்டு சென்மதி நிலுவைப் பற்றாக் குறையையும் ஏற்படுத்தும். ஏற்கனவே இலங்கை போன்ற நாடுகள் சர்வதேச சந்தையில் கடுமையான போட்டியை எதிர் நோக்குகின்றன. இந் நிலையில் பணவீக்கம் இதனை மேலும் மோசமடையச் செய்யும். இதனால் சிறு ஏற்றுமதியாளர்கள் போட்டியிடமுடியாத நிலையில் தமது உற்பத்திகளை கைவிட நேரிடும். இவ்வுற்பத்தியாளர்கள் இறக்குமதி பிரதியீடு (பதிலீடு) உற்பத்தித் துறைகளிற்தான் முதலீட்டில் கவனம் செலுத்த தொடங்குவர். இதனால் ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்க கூடிய வெளிநாட்டுச் செலாவணியும் வீழ்ச்சியடையும்.

நாட்டின் பணவீக்கம் மோசமடைந்து போகும் போது அதனைக்கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். நாணய முறைக் கட்டுப்பாடுகள், இறைக்கட்டுப்பாடுகள் (வரிக் கட்டுப்பாடுகள்) நேரடிக்கட்டுப்பாடுகள் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியும். தொடர்ச்சியான பணவீக்க போக்கானது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை பொறுத்தமட்டில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். மெய்வருமானத்திலேற்படும் வீழ்ச்சி வளரும் வேலையின்மை ஆகியவற்றால் வாழ்க்கைச் செலவு உயர்வு, வாழ்க்கைத்தர வீழ்ச்சி ஏற்பட்டு நாட்டின் சராசரி வளர்ச்சிகுன்றிய நிலைக்கு பின் தள்ளப்படும்.

அண்மைக் காலங்களில் இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சி சர்வதேச முதலீடுகளையும், முதலீட்டாளர்களையும் உள்வாங்கியது. இந்திய பொருளாதாரத்தையும், வெளிநாட்டு கடன்களையும் மீட்டெடுக்க

www.tamilarangam.net

நோக்கம் கருதி அந்நிய முதலீடுகட்கு இந்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இலங்கை போன்றே இந்தியாவும் தேயிலை, தும்பு, நார் போன்றவற்றை ஏற்றுமதி செய்கின்றன. எனவேதான் சர்வதேச முதலீட்டாளர்கள் புதிய சந்தையாக இந்தியாவை தெரிவு செய்திருப்பதால் இலங்கையின் ஏற்றுமதி பொருட்களின் சந்தை நிலவரம் தளம்பலாகவும், உற்பத்திகள் தேக்கமடையவும், விலைகள் வீழ்ச்சியடைந்தும் பணவீக்கம் உயர்நிலைக்கு செல்ல காரணமாகஅமைகின்றன. மத்திய வங்கி பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு துரித பயன் தரும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்ற பட்சத்திலும் இலங்கை அரசு பாதுகாப்புச் செலவுக்காக பெருமளவு பணத்தினை தொடர்ந்து விரயமாக்கும் வரை பணவீக்கமும் நேர் மாறாக கூடிய விகிதத்தில் அதிகரித்த வண்ணமே செல்லும்.

- நந்தகுமார்

Nur Für Freundkreis

புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 S.Fr.

ஒரு வருடம் - 22 S.Fr.

ஐரோப்பிய நாடுகள் - 25 S.Fr.

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!

விமர்சனங்களையும்

ஆக்கங்களையும்

வரவேற்கிறோம்!

- ஆர். குழு -

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி:

"BüCHER VERKAUF"

SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# என் தேசம்

கண்மூடித் துயில் கொள்வாள்
எங்கள்
மண்மாதா
அதன்மீது
கோட்டை கட்டி
கொடியும் பிடித்து
கொட்டமடித்திடுவோம்
வென்றுவிட்டோம்
எனக் கூவி
எங்கள்
எலும்புக் கூட்டுத் தோழர்கள்
படையணி நடத்திடுவர்
பிணந்தின்னிக் கழுகுகளை
விருந்துக்கு அழைத்திடுவோம்
ஆங்கோர் மூலையில்
தலை கொய்யப்பட்ட
முண்டங்கள் மீது
காக்கைகள்
சதைப் பிண்டங்களை
ருசி பார்க்கும்
இத்தனை காட்சிகள்
போதும்
என்
விதேசி நண்பனே
உனக்கு
என் தேசத்தை
இனங்காட்ட ?

• கலைவாசன்